பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

# வலம்புரி
VALAMPURI

லாலாசோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
ஸ்ரீநாகபூசணிஅம்மன்
பல்பொருள்வாணிபம்
பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 25 ஞாயிற்றுக்கிழமை (10-12-2000) தொ. பேசி 3378 ஒலி: 356

## ★ புலிகளுடனான சமாதானப் பேச்சிற்கு
# அரசின் சமாதான கதவுகள்
# எந்நேரமும் திறந்திருக்கும்!

### வன்னிக்கு உணவுப் பொருள்

(வவுனியா)

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிபபகுதிகளுக்கு கடந்த ஏழுநாட்களுக்கு அறுபத்தொன்பது லொறிகளில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன இந்தப் பொருட்கள் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய பகுதிகளுக்கு அனுப்பப்பட்டதாக வ்சேட ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

(ந-04)

## கிழக்கு மாணவர் மத்தியில் பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்க

(நமது நிருபர்)

**இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் எந்த விதமான முன் நிபந்தனையுமின்றி சமாதானப் பேச்சு வார்த்தைக்கு முன் வரவேண்டும். இல்லையேல் யுத்த நடவடிக்கைகளை மேற் கொள்ள நேரிடும்.**

**அதே வேளை பேச்சு வார்த்தைக்கான கதவுகளை அரசு திறக்க வேண்டுமென அவர்கள் கோருவார்களேயானால் அதனை பரிசீலனைக்கெடுத்துக் கொள்வது அரசாங்கத்தின் தார்மீகக் கடமையாகும்.**

இவவாறு, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று அலரிமாளிகையில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள மாணவர்கள், அலரி மாளிகையில் பிரதமரைச் சந்தித்து உரையாடியபோதே இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

நாட்டில் சமாதானத்தை நிலை நாட்ட எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்க அரசு தயாராக இருக்கிறது.

விடுதலைப் புலிகள் மீது அரசு தாக்குதல்களை அதிகரிக்கும் போது அவர்கள் சமாதானப் பேச்சிற்கு வருவதுவழக்கம்.

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடாத்த முற்பட்ட போது பெற்றுக் கொண்ட அனுபவங்களை நாம் ஒரு போதும் மறக்க

→8ஆம் பக்கம் பார்க்க

## யாழ். குடாக்கடலில் மீன்பிடிப்பதற்கு தடை

(யாழ்பபாணம்)

யாழ்.குடாக்கடலில் மறு அறிவித்தல் வரும்வரை மீன் பிடிப்பதற்கு இராணுவம் தடை விதித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து நேற்று மீன்பிடிப்பதற்கு சென்ற மீனவர்கள் திருப்பி அனுப்பப்பட்டதாகவும். தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினால்குடாக்கடலில்மீன் பிடிக்கச் சென்ற மீனவர்க

(8ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நாளை வைத்தியர்களின் பேரணி

(மட்டக்களப்பு)

தமது உயிருக்கு உத்தரவாதம்வழங்கவேண்டுமெனக் கோரி மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் நாளை பேரணியொன்றை நடத்தவுள்ளனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலிருந்து இப்

(8 ஆம்பக்கம் பார்க்க)

## கடற்படை வாங்கியயுத்தக் கப்பல் பாவனைக்கு உகந்தவை அல்ல?

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையின் 50ஆவது ஆண்டு பூர்த்தி பொன்விழாக் கொண்டாட்டங்கள் நேற்று கொழும்பு கடற்படைத் தளத்தில் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வின்சிறப்பம்சமாக கடந்த வாரம் இஸ்ரேல், இந்தியா ஆகிய நாடுகளில்கொள்வனவு செய்த மூன்று கடற்படை யுத்தக்கப்பல்களும் நேற்று சம்பிரதாய பூர்வமாக ஓடவிடப்பட்டது.

இஸ்ரேலிடமிருந்து வாங்கப்பட்ட எல்.ரி.பி ரகத்தைச் சேர்ந்த இரு கப்பல்களுக்கும் நந்தமித்திர', 'சுறநிமல' என பெயர் சூட்டப்பட்டுள்ளது. கப்பிரியல் வகை ஏவுகணை பொருத்தப்பட்ட இக் கப்பல் இருபது வருட பழமை வாய்ந்தது எனவும்,இவற்றின் ஆயுத பயன்பாட்டு றேடர் கருவி பழுதடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் இரு கப்பல்களும் தலா 27 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியானவை

→ 8ஆம பக்கம் பார்க்க

## வரதராஜப்பெருமாள் கொழும்பு திரும்பினார்

(வடமராட்சி கிழக்கு)

வடக்குக் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் இந்தியாவிலிருந்து மீண்டும் கொழும்பு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்குப் பின்னர் இந்தியா சென்ற இவர் நேற்று முன் தினம் கொழும்பு திரும்பியுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(க-43)

## மனித உரிமைகள் மீறும் சம்பவம் இலங்கையில் அதிகரித்து வருகிறது!

### அமெரிக்கமனித உரிமைஅமைப்புகண்டனம்

(கொழும்பு)

இலங்கையில் மனிதஉரிமை மீறல்கள்அதிகரித்துள்ளதாக, அமெரிக்காவிலுள்ள மனித உரிமை அமைப்பொன்று கண்டனம் தெரிவித்துள்ளது.

இன்று சர்வதேச ரீதியாக அனுஷ்டிக்கப்படும் மனித உரிமை தினத்தைமுன்னிட்டு. மேற்படி அமைப்பு வெளியிட்ட அறிக்கையிலேயே தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வடக்குக் கிழக்கு பகுதியில் தொடரும் போர் நடவடிக்கையினால் உயிரிழப்புக்கள், இடம்பெயர்வுகள் அதிகரித்து யுத்தமும் தீவிரமடைந்துள்ளததனாலேயே மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## மரணதண்டனை மசோதா அமைச்சர் என்ற முறையில் அமுல் செய்யவுள்ளேன்

### நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன்

(கொழும்பு)

மரணதண்டனை முறை நாகரிகம் படைத்த சமூகத்தினால் நீக்க படவேண்டும். தனிப்பட்ட முறையில் மரண தண்டனையை எதிர்க்கும் நான் நீதி அமைச்சர் என்ற முறையில் அதனை அமுல் செய்யவேண்டியவனாக உள்ளேன்.

இவ்வாறு, நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் சர்வதேச மனித உரிமைகள் தினத்தைக் குறிக்கும் வைபவத்தில் உரையாற்றுப்போது குறிப்பிட்டுள்ளார்

இந்த வைபவம் நேற்றுக் காலை கொழும்பில் நடைபெற்றது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## களுவாஞ்சிக் குடியில் புலிகள் - படையினர் திடீர் மோதல்

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக் குடியில் பழந்தோட்டம் என்ற இடத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதுடன், 2 விசேட அதிரடிப் படை வீரர்கள் காயமடைந்து அம்பாறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## நிவாரணத்தை வழங்க முடியாத அரசாங்கம் பதவி விலக வேண்டும்

### பாராளுமன்றில் ஆனந்தசங்கரி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதியில் தொடரும் யுத்தத்தினால் மக்கள் இடம் பெயர்ந்து அல்லற் பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், ஒழுங்காக நிவாரணப் பணிகளை மேற் கொள்ள முடியாத அரசாங்கம் பதவி விலக வேண்டும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், அங்குமேலும்தெரிவிக்கையில்

வடக்கு -கிழக்கில் யுத்தத்திற்காக பெருமளவு பணத்தை அரசாங்கம் செலவு செய்கிறது. இதனால் பாதிப்படைந்துள்ள அப்பகுதி மக்கள் பெரும் கஷ்ரங்

(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்


### வாங்க விற்க

உதிரிப் பாகங்களிற்காக ரி.வி. றேடியோ, டெக்குகள் வாங்கப்படும். ரி. வி. டெக், றேடியோ, மணிக்கூடுகள் திருத்தித்தரப்படும். அன்ரனா பொருத்தித்தரப்படும். வீனஸ் டெல்கா 140 கே. கே. எஸ் வீதி (சத்திரசந்தி முன்பாக) யாழ்ப்பாணம். T. P 2064

(1991)

### விற்பனைக்கு

J. V. C. கலர் T. V 20'' NATIONAL 12'' கறுப்பு வெள்ளை, GOLD STAR 17'' கறுப்பு வெள்ளை. ஒறிஜினல் ஸ்ரெப்லைசர் (ஜப்பான்) முதலியன விற்பனைக்குண்டு. வீனஸ் டெல்கா 140, K K S வீதி (சத்திரத்துச் சந்தி முன்பாக) யாழ்ப்பாணம். (1991)

### விற்பனைக்குண்டு

லவ் பேட்ஸ் சகலநிறகுருவிகளும், கூடும், பிங்க பேட்ஸ் குருவிகளும், கூடும், மீன் தொட்டியும் அதற்கான மோட்டரும், நாய்க்கூடு என்பன விற்பனைக்குண்டு.
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி சிங்கராஜாசெந்தூரன் சைவசன்மார்க்க வித்தியாசாலை அருகாமை, ஏழாலை.

[2001]

### ENGLISH CLASSES

தரம் 6 முதல் தரம் 11 வரையிலான மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புக்களும், தரம் 9 முதல் தரம் 11 வரையிலான மாணவர்களுக்கான ஆங்கில இலக்கிய வகுப்புகளும், G C.E A/L மாணவர்களுக்கான பொது ஆங்கில வகுப்புகளும் ஆரம்பம். இன்று 11 - 12 - 2000. தொடர்பு: கோ. சுப்பிரமணியம் NO. 62, பழம் றோட், கந்தர்மடம். (அனுமதிக்கு பெற்றோர்/பாதுகாவலர் வருகை அவசியம்)

(1987)


# வாய் வேதாந்தம் பேசுவதால் பயன் ஏதும் விளையப் போவதில்லை

(தென்மராட்சி)

மனிதனுக்கு மதம் மிகமிக அவசியம். ஆனால் உலக காரியங்களுக்காக மதமாற்றம் பொல்லாதது. இதனால் கேடுதான் விளையும். ஒருவர் மதம் மாறினால் அவர் அந்தமதத்திலும் அதிக காலம் இருக்க மாட்டார். இது அனுபவரீதியாகக் கண்ட உண்மை. மனிதன் உணவு, உடை போன்ற சகல சலுகைகளுக்காக மதம் மாறுவதைப் பார்க்கின்றோம். இதனால் நாட்டில் ஒழுங்கீனம்தான் ஏற்படும். சமயம் அனுஷ்டானத்துக்குரியது. அனுஷ்டானம் தான் முக்கியம் வாய் வேதாந்தம் பேசுவதால் பயன் ஒன்றும் கிட்டமாட்டாது.

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ணா சேவா ஆச்சிரமத்தின் முதன்மையாளரான சுவாமி சித்ருபானந்தா வதிரியன்பதி முத்துக்குமாரசாமி தேவஸ்தானத்தின் மண்டலாபிசேகத்தின் போது 'சமயம்-வாழ்வு-பக்தி' எனும்பொருளில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

நூற்றுக்கணக்கான பக்தர்கள் பங்குகொண்ட இவ் விழாவில் சுவாமி சித்ருபானந்தா தொடர்ந்து பேசுகையில்;

ஸ்ரீமத் பகவத்கீதை தினம் பாராயணம் செய்யவேடிய நூல். இது வாழ்க்கையின் சகல அம்சங்களையும் தெளிவு படுத்தும் நூல். பகவான் ஸ்ரீகிருஸ்ணரின் திருவாயிலின் ஊடாக மலர்ந்த நூல். 700 சுலோகங்களையும் 18 அத்தியாயங்களையும்கொண்டது. சுவாமி விவேகானந்தர் இந்தியா முழுவதும் கால் நடையாகச் சுற்றிவந்த பொழுதும் கூட இவரது கையில் இந்த நூல் காணப்பட்டது. உலகெங்கும் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட பெருமை இதற்கு உண்டு.

பகவத்கீதையை சரியாக பாராயணம் செய்தால் வாழ்க்கை, தத்துவம், பக்தி, சமயம் என்பன தெளிவாகப் புலனாகும். உலகத்தைப்பற்றிய எண்ணங்களும் கவலைகளும் உன் மனதைச் சஞ்சலப் படும்படி செய்து கொள்ளாதே செய்ய வேண்டிய காரியம் ஒவ்வொன்றையும் அதனதன் காலத்தில் செய். ஆயினும் உன் மனம் எப்போதும் ஈசுவரனிடம்நிலைத்திருக்கட்டும். ஸ்ரீ இராமகிருஸ்ணனின் வாழ்வைச் சரிவரப்படிப்பவர்கள் கீதையின் விளக்கத்தைச் சரிவரப்புரிந்து கொள்வார்கள் என்றார்.

(க-77)

## இராசி பலன்

10. 12. 2000
(கார்த்திகை 25ஞாயிறு)
சதுர்த்தசி பி.ப.5.30 வரை
கார்த்திகைபி:ப.12.48 வரை
ராகு காலம் 4.49- 6.19
சுப நேரம் 9.19 - 10-49
சித்தம், சர்வாலய தீபம்

**மேடம்**
கௌரவக் குறைவு, தன விரயம், விவாதம். காரிய தாமதம்.

**இடபம்**
தெளிவான சிந்தனை, உடல் நலம், சயன சுகம், போசன சுகம்.

**மிதுனம்**
அலைச்சல், சுபகாரியம், கர்வப்படுதல், நித்திரைக் குறைவு.

**கடகம்**
மனமகிழ்ச்சி, பொருள் வரவு, நண்பர்கள் சந்திப்பு, கௌரவம்.

**சிங்கம்**
தொழில் சிறப்பு, முயற்சிகள் கை கூடும், அதிகாரம், ரோகம்.

**கன்னி**
பிரயாணம், மனக் குழப்பம், காரிய நன்மை, உறவினர் தொடர்பு.

**துலாம்**
எதிர்பாராத பிரச்சினை, பிரயாண பயம், சிறு வியாதி, கடன் தொல்லை.

**விருச்சிகம்**
தலைவலி, போசன சுகம், சுவாரஸ்யம், பிரயாணம்.

**தனுசு**
தனவரவு, சுக வாழ்வு சத்துரு ஜெயம், முயற்சி பலிதம்.

**மகரம்**
புத்திர சோகம், தாழ்வு நிலை, காரிய தடங்கல், வியாதி.

**கும்பம்**
பயந்த சுபாவம், தன்நம்பிக்கைக் குறைவு, தாய் வழி உறவு, காரிய தாமதம்.

**மீனம்**
தனவரவு, முயற்சி பலிதம், இனிய சுபாவம், பிரயாணம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது:)

வளவன்

## வேலணையில் வீதி அபி. திணைக்களம் மீண்டும் இயங்க கோரிக்கை

(மண்டைதீவு)

வீதி அபிவிருத்தித்திணைக்களத்தை, மீண்டும் வேலணையில் செயற்படுத்துமாறு தென்தீவகபிரதேச சன சமூக நிலையங்களின் சமாசம் கோரிக்கை விடுத்துள்ளது.

வேலணை பிரதேச சபைத் தலைவர் என். கருணாகர குருமூர்த்திவேலணைபிரதேச செயலர் எஸ். இராசரத்தினம் ஆகியோர்களிடம் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வேலணையில் இயங்கிவந்த வீதி அபிவிருத்தித் திணைக்களம் அங்குஇடம்பெற்றஇராணுவ நடவடிக்கையை அடுத்து 1990 ஆம் ஆண்டின் பின் செயலிழந்து விட்டதால் தீவுப்பகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அபிவிருத்தி திணைக்களப் பணிகள் மந்தகதியில் இடம்பெற்று வருவதுடன், தரமற்ற வீதிதிருத்த செயற்பாடுகள் காணப்படும்,

அங்கு இருந்த வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமான கட்டடங்களும்வேறு திணைக்களத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன,

ஆரோக்கியமான ஆக்கபூர்வமான வீதி திருத்தச்செயற்பாடுகள் வேலணைப் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் அங்கு மீளவும் மேற்படி திணைக்களம் இயங்கவேண்டிய அவசியம் என்பனகுறித்து இக்கோரிக்கையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

(உ-11)

## வீட்டிற்குத் தீவைப்பு

(மந்துவில்)

மந்துவில் மேற்குப் பகுதியில் அமைந்திருந்த வீடொன்று மர்மமான வகையில் எரியூட்டப்பட்டுள்ளது.

கடந்த 6 ஆம்திகதி இடம் பெற்ற இச்சம்பவத்தில் எரிந்துசாம்பரான வீடு வே. இரத்தினசிங்கம் என்பவருடையதென தெரியவந்துள்ளது.

வீட்டிற்குத் தீவைத்தவர் யார் எதற்காக தீவைக்கப்பட்டது போன்ற விடயங்கள் இன்னமும் அறியமுடியவில்லை.

(உ-39)

## பரீட்சை மண்டபம் அமைப்பு

[யாழ்ப்பாணம்]

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் பரீட்சை மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

(சு-12)

## அதிபர் வேண்டுகை

(யாழ்ப்பாணம்)

யாழ். சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் தரம்-9 இல் கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரையும் தமது மாவட்டப் பொது பரீட்சை புள்ளிகளையும், இரண்டாம், மூன்றாம் தவணைக்கான கணிப்பீட்டுப் புள்ளிகளையும் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை மு. ப. 10. 00 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் சமர்ப்பிக்குமாறு அதிபர் மு. பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

(உ)

## சமாதானம் வேண்டி யாழ். நகரில் இன்றுபேரணி

[ஈச்சமோட்டை]

இன்று ஞாயிறுக்கிழமை சமாதானம் வேண்டி யாழ். நகரில் செபமாலைப் பேரணியொன்றுஇடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் கத்தோலிக்க மறை மாவட்டத்தின் நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பேரணியில் சமாதானம் விரும்பிய அனைவரையும் கலந்து கொண்டு பேரணியைப் பலப்படுத்துமாறு வேண்டப்பட்டுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு அடைக்கலமாதா ஆலயம், புனித யாகப்பர் ஆலயம், புனித யுவானியார் ஆலயம் ஆகியவற்றிலிருந்து ஆரம்பமாகும். சமாதானம் வேண்டிய செபமாலைப்பேரணி இறுதியில்யாழ். மரியன்னை பேராலயத்தை வந்தடையும்.

அங்கு 11 மணியளவில் சமாதானம் வேண்டி சிறப்பு இறைஞ்சல் திருப்பலி இடம் பெறும்.

இச்சமாதானம் வேண்டிய செபமாலைப் பேரணியில் சமாதானம் விரும்பிய அனைவரும் இணைந்து கொள்வதன் மூலம் தமிழ்மக்களின் உடனடித் தேவையான சமாதானத்தை அரசிற்கும் சர்வதேசத்திற்கும் உணர்த்தமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(க-59)


### யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு

2001 இற்கான G. A. Q 1St I11 Commerce வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

2002 இற்கான புதிய பிரிவுகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

இப்பட்டப் பாடநெறிவட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம் ஆகிய இரு இடங்களிலும் இடம்பெறும்.

எமது நிறுவனத்தால் பல்கலைக் கழகப் பதிவுகள் செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்குப் பதிவாளருடன் தொடர்பு கொள்க.

பதிவாளர், பட்டப்படிப்புகள் பிரிவு, யாழ்ப்பாணக் கல்லூரி.

பட்டப்படிப்புகள் பிரிவு, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

Jaffna Branch,
464, Hospital Road,
Jaffna.

(C/ 1098)

### பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டிடப் பொருள் விற்பனை நிலையத் திறப்பு விழா

அன்புடையீர்!

எமது சங்கத்தால் புதிதாக அமைக்கப்பட்ட விற்பனை நிலையத் திறப்பு விழா எதிர் வரும் திங்கட்கிழமை 11-12-2000ம் திகதி மதியம் 12.20-1.50 மணி வரையுள்ள சுபவேளையில் திறந்து வைக்க இருப்பதால் அத் தருணம் தாங்களும் வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்:- பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகாமையில்.

தங்கள் நல்வரவை நாடும்

பணிப்பாளர்களும் பணியாளர்களும்

பருத்தித்துறை பல. நோ. கூ. சங்கம்
பருத்தித்துறை.

(கி/1097)

### வாழ்த்துகின்றோம்

A/L 2003 இற்காக
O/L 2000 பரீட்சை
எழுதும்மாணவர்களுக்கு
எமது வாழ்த்துக்கள்.

DMI
யாழ் நகர்

(1993)


### பிரிவுத்துயர் பகிர்வு

**திருமதி தம்பிப்பிள்ளைசேதுப்பிள்ளை**

காரைநகரைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சேதுப்பிள்ளை 08- 12- 2000 அன்று காலமானார்.
இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்: ரு. தனபாக்கியவதி.

யாழ். பல்கலைக்கழக 3-ம் வருட கலைப்பீட மாணவி தவராணியின் அன்புச் சகோதரன்

**சுப்பிரமணியம் கேதீஸ்வரன்**

ஜேர்மனியில் நேற்று முன்தினம் அகாலமரணமானார்.
ஈமக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: 3ம் வருட கலைப்பீட மாணவர்கள்

நூலகம்

# செய்தித் துளிகள்

## தீவகத்தில் சொட்டுமருந்து

(ஊர்காவற்றுறை)

தேசிய நோய்த்தடுப்பு தினமான டிசம்பர் 2 ஆம் திகதி போலியோ சொட்டு மருந்து தீவுப்பகுதிகளில் 17 நிலையங்களினூடாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி சொட்டு மருந்தானது ஊர்காவற்றுறை, காரை நகர், அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு போன்ற இடங்களில் உள்ள 17 நிலையங்களினூடாக 3167 குழந்தைகளிற்கு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தீவுப்பகுதியில் உள்ள 5வயதிற்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் போலியோ சொட்டுமருந்து வழங்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரியான ச. திவ்வியகுமாரன் தெரிவித்துள்ளார்.

(ச-75)

## புங்குடுதீவில் இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில், தீவக லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும் 'வைத்திய முகாமும் அபிவிருத்தித் திட்டத்துக்கான கருத்தரங்கும்' இன்று காலை 10-00 மணி தொடக்கம் 1-00 மணிவரை புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி வைத்திய முகாமில் கண், வாய், மார்புப் புற்றுநோய் என்பவற்றுக்கான பரிசோதனைகளுடன் பொதுப் பரிசோதனையும் மேற்கொள்ளப்படும். இதனைத் தொடர்ந்து கருத்தரங்கு இடம்பெறும்.

அதேவேளை, புங்குடுதீவு வாழ் மக்களின் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்குமுகமாக கொக்குவில் லயன்ஸ் கழகம் ஓர் மூன்றாண்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

[ச]

## தூபிப் பகுதி துப்பரவு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கிட்கு அருகிலுள்ள தந்தைசெல்வநாயகம் நினைவுத் தூபியை அண்டிய பகுதிகள் யாழ்.மாநகர சபை ஊழியர்களினால் துப்புரவு செய்யப்பட்டுள்ளதுடன், துரையப்பா விளையாட்டரங்கின் விளையாட்டுத்திடலும் தற்போது ஊழியர்களால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

(சு-59)

## பரிசளிப்பு வைபவம்

(மந்துவில்)

யா. கரவெட்டி ஞானாசாரியா கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்றுப் சனிக்கிழமை பாடசாலை அதிபர் வே. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்றது.

(உ-39)

### அங்குரார்ப்பணம்

[மந்திகை]

கரணவாய் மேற்கு மாவலி சிக்கன சடனுதவுக் கூட்டுறவுச் சங்கம், அண்மையில் பொருட் நிறுவனப் பிரதிநிதிகளினால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

ஐம்பதுக்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட இச் சங்கத்தினால், ஆரம்பித்து சொற்ப தினங்களுக்குள்ளாகவே குறைந்த வட்டி வீதத்துடன் 4பேருக்கு கடனுதவி வழங்கப்பட்டிருப்பதாக சங்கத் தலைவர் அ. சிவநேசகுமார் தெரிவித்துள்ளார்

(உ-23)

## நாடக கருத்தரங்கு

(மட்டக்களப்பு)

இந்துசமயப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இருநாள் நாடகக் கருத்தரங்கு மட்டக்களப்பு இந்து கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகியுள்ளது.

நாடகப் பிரதியாக்கம், நடிப்பு முறைகள், நெறியாள்கை, கலந்துரையாடல் உட்பட பல்வேறு தலைப்புக்களில் இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக கே. தங்கேஸ்வரி தெரிவித்துள்ளார்.

(சு-60)

## டெங்கு விழிப்புணர்வு கூட்டம்

[ஈச்சமோட்டை]

யாழ். மாநகரசபை சுகாதார பணியாளர்களுக்கான டெங்குபற்றிய விழிப்புணர்வுச்கூட்டம்இன்றுகாலை8.30 மணிக்கு கிரிப்பிள்ளையார் கோவிலடியில் அமைந்திருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாநகரசபை வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி இ. தெய்வேந்திரத்தினால் நடத்தப்படும் இவ் விழிப்புணர்வு கருத்துரையில் குடும்பநல, சுகாதார உத்தியோகத்தர்கள், பொது பரிசோதகர்கள், சுகாதாரத் தொண்டர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்,

(ச-59)

## கொப்பிகள் வழங்கல்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு ஐக்கிய தீப சமூகப் பொருளாதார கல்விக்கழகத்தின் கல்விச் சேவைப் பகுதியினால் நெடுந்தீவு மேற்கு தென்னிந்தியத் திருச்சபையில் கல்வி பயிலும் சிறுவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளும் எழுது கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவுப் பிரதேசத்தின் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் இக்கழகத்தினரால் இலவச வகுப்புகள் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது

[ச 82]

## ஆடுகள் வழங்கல்

(சங்கானை)

வலி.தென்மேற்குப்பிரதேச சபையால் பயனாளிகளுக்கு கடந்த வியாழக்கிழமை ஆடுகள் வழங்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் வலி. தென்மேற்கு பிரதேசசபைத் தலைவர்வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் உட்படபலர் கலந்துகொண்டனர்.

பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 13 ஆடுகளும் தலா ரூபா 4000 பெறுமதிமிக்கது என்பது குறிப்பிடத்தக்கது.

## தவறணை அகற்ற நடவடிக்கை

சரித்திரப் பிரசித்தி பெற்ற தொல்புரம் பதானையம்பதி அருள் மிகு ஸ்ரீ ஞான வைரவ சுவாமி திருக்கோவிலுக்கு முன்பாக உள்ள கள்ளுத் தவறணை ஆலய வழிபாட்டிற்கு இடைஞ்சலாக இருப்பதாலும், இவ்விடத்தின் புனிதத் தன்மையையும் கருத்தில் கொண்டு இதனை வேறொருஇடத்திற்கு மாற்றுமாறு இப்பகுதி மக்கள் பலர் வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளமையினையடுத்து. சங்கானைதெங்குபனம் பொருள் அபிவிருத்திச் சங்கத் தலைவரிடம்உடனடியாக பிறிதொரு இடத்திற்கு இதனை மாற்றுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

(உ)

# அப்பாவி பொதுமக்கள் அநியாயமாக பலியாவது கண்டிக்கப்பட வேண்டும்

## ஈ. பி. டி. பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாக பலியாகும் அசம்பாவிதங்கள் சந்தேகங்களிற்கு இடமில்லாத வகையில் கண்டனத்திற்குள்ளாக்கப்படவேண்டும் என வலியுறுத்த விரும்புகிறோம்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை ஒட்டி ஈழமக்கள் ஜனநாயக கட்சியினர்விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்று 10 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் கடைப்பிடிக்கப்படவுள்ளது. மனித உரிமைகள் பேணப்பட வேண்டும் என்பதில் அக்கறை உடையவர்களும், ஆர்வம் கொண்டவர்களும இத்தினத்தில் மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவார்கள்.

குறிப்பாகப் பொதுமக்கள் போக்குவரத்துச் செய்தவாகனங்கள் அண்மைய வாரங்களில் குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்கான சம்பவங்கள் இரண்டு இடம் பெற்றுள்ளன அனுராதபுரம் பகுதியின கடந்த 28 ஆம் திகதி அன்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் ஒன்பது பேர்பலியானதுடன் நாற்பதுபேர் காயமடைந்துள்ளனர்.

இதேபோல கடந்த 6 ஆம் திகதி மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி வந்தவாகனம் குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி நால்வர் பலியானதுடன் பதினாறு பேர் காயமடைந்துள்ளனர்.

இத்தகைய சம்பவங்களில் பாடசாலை மாணவர்களும் சிறுவர்கள் பெண்கள் எனப் பல தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் வெலிகந்தையில் வீட்டினுள்இருந்த அப்பாவிக் கிராமவாசிகள் கூட குரோதமாகப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர் இது தவிர மக்களின்சுதந்திரமான போக்குவரத்து என்பது கூடக் குறிப்பாகக் குடாநாட்டு மக்களுக்கு மறுக்கப்பட்டதாக உள்ளது.

தொடர்ந்து கொண்டிருக்கும் போர்ச் சூழல் என்பதைக் காட்டி இத்தகைய சம்பவங்களை எவரும் நியாயப்படுத்திவிட முடியாது. ஏனெனில் போர் நெருக்கடி நிலையில் எவ்விதத்திலும் சம்பந்தப்படாயல் தத்தம் சொந்தத் தேவைகளின் நிமித்தமாகச் செயற்படும் அப்பாவிகள் அநியாயமான முறையில் உயிரிழக்க நேரிடுவது சகிக்கமுடியாத ஒரு கொடுமையாகும்.

இத்தகைய கொடூரங்களுக்கு முடிவு கட்டும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்க ஒவ்வொருவரும் தம்மாலான பங்களிப்பை நல்க முன்வரவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்துள்ள சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் கேட்டுக் கொள்கின்றோம். இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கொழும்புத்துறை மக்களின் உடமைகள் பல திருட்டு சென்றுவந்தோர் தகவல்

(ஈச்சமோட்டை)

தாம் கைவிட்டு வந்த உடமைகளில் அனேகம் காணாமல் போயுள்ளதுடன், ஏனையவை பெரும் சேதத்திற்கு உள்ளாகி இருப்பதாக கொழும்புத்துறை வளன்புரப் பகுதி பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த கால போர் அனர்த்தங்களை அடுத்து இப்பகுதி மக்கள் உடமைகளை கைவிட்டு இடம்பெயர்ந்ததும், தற்போது இப்பகுதிக்கு பொதுமக்கள் செல்ல படையினர் அனுமதித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த 6 ஆம் திகதி மேற்படி பகுதியில் இருந்து, தமது எஞ்சிய பொருட்களை எடுத்துவர படையினர் அனுமதித்திருந்தமை தெரிந்ததே.

(உ-59)

## விநியோக குழாய்களில் வெடிப்பு வீணான நீர் விரயம்

(ஈச்சமோட்டை)

யாழ் மாநகரசபைக்கு உட்பட்ட பிரதான நீர்த்தாங்கி மூலம் நீர் விநியோகம் செய்யும் குழாய்களில் வெடிப்புகள் பல ஏற்பட்டிருப்பதால், நீர் வீணாய் விரயமாவதை காணக்கூடியதாய் உள்ளது.

நீண்டகாலமாக பாவனையின்றிக்காணப்பட்ட இக்குழாய்களை மீள் பரிசீலனைக்குஉட்படுத்தாது அதனூடுநீர்விநியோகம்செய்யப்படுகின்றமை மற்றும் நீர் விநியோக குழாய்களின் காலங்கடந்த தன்மை இவையே இந்த நீர் விரயத்திற்கு காரணமாய்அமைகிறது

இதேசமயம்,நீர் விநியோக குழாய்களில்வெடிப்புஏற்பட்டு அதனூடாக நீர் வெளியேறுவதை கண்ணுறும் பொதுமக்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட பகுதியினர்க்கு அறியப்படுத்துவதன் மூலம், வீணான நீர் விரயத்தையும், அதனல் பொதுமக்கள் சந்திக்கும் சிரமங்களையும் தவிர்க்க இயலும் என நீர் வழங்கல் பிரிவினர் ஆலோசனை தெரிவித்துள்ளனர்

(உ-59)

## பொது மக்கள் அசமந்தம் சட்டத்தின்பிடியில்இருந்து தப்பும் கள்வர் கூட்டம்

(ஈச்சமோட்டை)

சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட திருட்டு நபர்கள் பலர், அவர்கள்மீது வழக்குப் பதியபொதுமக்கள் தயங்குகின்றகாரணத்தால் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி வருவதாகத் தெரியவந்துள்ளது

ஆட்களற்ற பகுதிகளில் களவு வேலைகளில் ஈடுபட்டு, பொலிஸாரிடம் அகப்பட்ட பலர், பொது மக்களின் இந் நடைமுறையால் குற்றத்திற்குரிய தண்டனையைப் பெற்றுக்கொள்ளாமல் வெளியேறி வருகின்றனர்.

திருடர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்தால், அவர்களின்சகபாடிகள்கோபமுற்று தமக்கு அச்சுறுத்தலாக விளங்கலாமென சம்பந்தப்பட்டவர்கள் கருதுவதாலேயே இந்நிலை ஏற்பட்டு வருகிறது.

அத்துடன், திருட்டு இடம்பெறும் வீடுகளின் உரிமையாளர்கள் அங்கு வசிக்காததால், அவ் வீடுகளில் வாடகைக்கு குடியிருப்பவர்கள் ''வேறு ஒருவருடையபொருள்தானே களவுபோனது'' என்றரீதியில் சிந்திப்பதும்கள்வர்கள் தப்பிக் கொள்ளக் காரணமாக அமைந்து விடுகிறது.

இச்சாதக நிலையைப்பயன்படுத்தும் திருட்டுத் தொழில் புரிபவர்கள், தமது தொழிலை மேலும் மேலும் விருத்தி செய்து சமூகத்தின் நிம்மதியான வாழ்வுக்குக் குந்தகம் ஏற்படுத்திவருவதுகுறிப்பிடத்தக்கது.

(உ - 59)

### ஒன்றுகூடலும் திருப்பலிபூசையும

(மந்துவில்)

பலாலி ஆசிரியர்கலாசாலை கிறிஸ்தவமன்ற ஆசிரியமாணவர்களின் ஒன்றுகூடலும் திருப்பலி பூசையும் நேற்று காலை 9. 45 மணியளவில் கலாசாலை சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெற்றது.

(உ-39)

### வேலணையில் பரிசளிப்பு விழா

[சுண்டுக்குளி]

தீவக கல்விவலய சமய கலாசாரக் குழுவினால் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் வேலணை மேற்கு பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் ப விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் யாழ். மாவட்ட பதில் நீதிபதி மு. திருநாவுக்கரசுமுதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

[ச-110]

## ஆலயத்தில் மீண்டும் பூஜை

(நெடுந்தீவு)

ஆலய நிர்வாக சபையினரிடையே எழுந்துள்ள இழுபறி நிலை காரணமாக கடந்த இரு மாதங்களாக பூட்டப்பட்ட நிலையில் பூஜைவழிபாடுகளின்றி இருக்கும் நெடுந்தீவு மேற்கு நெடுவினி சித்தி விநாயகர் ஆலயத்தினை மீண்டும் திறந்து விடுவது சம்பந்தமான கூட்டமொன்று இன்று காலை 9.30 மணியளவில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(உ-32)

## விளையாட்டு விழா

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் மிலேனிய ஆண்டுக்கான விளையாட்டு விழா கடந்த 5 ஆம் திகதி பாடசாலை அதிபர் வி. ஏ. சிவராசா தலைமையில் இடம் பெற்றது.

மேற்படி நிகழ்விற்கு தீவக வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் வி. ராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராகவும், ஊர்காவற்றுறைப் பங்குத்தந்தை வண பிதா ஜே. எ. ஜேசுதாஸன் அடிகளார் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

(சு-75)

### கொட்டடியில் ஜிம்னாஸ்டிக்

கொட்டடி நமசிவாயம்வித்தியாலயத்தில் சனி ஞாயிறு தினங்களில் ஜிம்னாஸ்ரிக் வகுப்புகள் நடைபெற்று வருகிறது.

(உ-59)

# அஞ்ஞான இருளகன்று மெஞ்ஞானம் ஏற்பட

# திருக்கார்த்திகை தீபத்தை நாளும் பணிவோம்

**இன்று சர்வாலய தீபத்தை ஒட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது. (ஆ-ர்)**

இந்து சமயப் பண்பாடுகளுள் எந்தவொரு காரியங்களையும் ஆரம்பிக்கும் பொழுது மங்களவிளக்கேற்றி கருமங்களைத் தொடங்குவது சிறப்பம்சமாகும். உலகஇருளகல, ஒளி யேற்படுதல் போல மக்களிடமும் அஞ்ஞான இருளகன்று மெய்ஞ்ஞான ஒளி ஏற்பட வேண்டுமென்பதே சுடர் வீசும் விளக்கின் ஒளி தரும் தத்துவமாகும்.

இத்தத்துவத்தை உலகோருக்கு உணர்த்தவே சிவபிரானும் அடி, முடி தெரியாத பெருஞ்சோதி வடிவினனாக திருக்கார்த்திகையாகி கார்த்திகை மாத விளக்கீட்டு நன்னாளிலே சோதிவடிவாக காட்சி தந்தனன்.

### சொக்கப்பானை

திருக்கார்த்திகை என்பப்படும்கார்த்திகை மாதவிளக்கீட்டு நாளிலே ஆலய வாசல்களிலே சொக்கப்பானை கொழுத்தி வழிபாடு செய்வார்கள். இந் நாளைப்பற்றிச் சமயப் பெரியார்கள் பல விதமான விளக்கங்களைக் கூறுவார்கள். சிவபெருமானை சுட்கப்பன் என்று சொல்வதாகவும்; அவரைச் சோதி வடிவிற் காண வே சொக்கப்பானை கொழுத்திச் சோதிவடிவாகப்பார்த்து தரிசிப்பதாகவும், அகந்தை கொண்ட பிரமா விட்டுணுக்கள் சிவராத்திரிதினத்திலே சிவனைச்சோதி வடிவாக வழிபட்டுத் தம் ஆணவம் நீங்கப் பெற்றதாகவும்- அந்தக்காட்சியை மீண்டும் திருவண்ணாமலையிலே காட்டியருளும்படி வேண்டுதல் செய்ததனால் இறைவன் கார்த்திகைத்தீப நன்னாளிலே திருவண்ணாமலையிலே சோதி வடிவாகக் காட்சி கொடுத்ததாகவும், இத்தினத்திலே மக்கள் எங்கும் தீபங்கள் ஏற்றி வழிபாடு செய்வதாகவும் கூறப்படுகின்றது.

### ஒளியின் பெருமை

மேலும்சிவபிரான்முப்புரங்களை எரித்துப் புன்னகை செய்த ஒளி நாளே கார்த்திகைத் தீப விளக்கீட்டு நாள் என்றும் வழிபாடு செய்கின்றனர். ஒளியின் அவசியம், அதன் பெருமை, தேவை என்பதை உலகுக்கு நன்கு உணர்த்தவே தீபத்திருநாள் கொண்டாடப்படுவதாக உணர முடிகின்றது. வாழ்க்கைத் தத்துவங்களை மக்கட்கு நன்கு விளக்கி நெறிப்படுத்துவதே இந்து சமய விழாக்களும், விரதங்களும், கொண்டாட்டங்களும் என்பதை சைவசமய சான்

### நீர்வைமணி

றோர்கள் பலவழிகளில் எமக்குஅறிவுறுத்தியுள்ளனர். இந்த விதத்திலே ஒளிக்குத் தனிச் சிறப்பிடம் உண்டு.

### விளக்கீட்டின் சிறப்பு

விளக்கீட்டின் சிறப்பைப் பற்றி

வளைக்கை மட நல்லார்
மாமயிலவன் மறுகில்
துளக்கில் கபாலீச்சரத்தான்
தொல்கார்த்திகை நாள்
தளத்தேந்திள முலையார்
தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே
போதியோ பூம்பாவாய்

எனவரும் தேவாரப் பதிகம் அழகாக எடுத்துக்காட்டுகின்றது. இதுமட்டுமன்றிச் சமண நூலாகிய சீவக சிந்தாமணியும் கார்த்திகை விளக்கீட்டைச் சிறப்பித்துப் பின்வருமாறு

தார்ப்பொலி தருமதத்தன்
தக்கவாறுரைப்பக் குன்றித்
கார்த்திகை விளக்கிட்டன்ன
கடிமகள் குவளைப்பைந்தார்
போர்த்ததன் கைலமெல்லாம்
பொன்னென வியர்த்து

எனவரும் அடிகளால் அழகாக விளக்குகின்றது.

ஆதலால் ஒளியின் தேவையை, அதன் சிறப்பினை உயர்வினை மனத்திற் கொண்டு கார்த்திகை மாத விளக்கீட்டு நன்னாளிலே ஆலயங்களிலும். இல்லங்களிலும் மற்று எல்லா இடங்களிலும் தீபங்களை வரிசையாக ஏற்றி அந்தச்சுடரொளியிலே இறை தரிசனம் செய்து நற்பேறடைவோமாக.

சிறந்த கார்த்திகைக் கார்த்
திகைத் தீபத்தால்
நிறந்தவாறு நிலாமுகமண்
டலம்
பிறந்துசா முன்னொரு கரம்
பெட்புற
உறைந்து போற்று நர்க்கோர்
பிறவியில்லையே.
(திருச் செந்தூர்ப் புராணம்)

## தலைமைத்துவ தகைமைப் பயிற்சி

(நெடுந்தீவு)

வடக்கு-கிழக்கு கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின்அனுசரணையுடன் நெடுந்தீவுஉதவிஅரசாங்கஅதிபர்பிரிவிற்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட 30 இளைஞர் யுவதிகளுக்கான தலைமைத்துவ தகைமைப்பயிற்சி, நாளைதிங்கட்கிழமை நெடுந்தீவு மகா வித்தியாலய ஆரம்ப பிரிவு மண்டபத்தில் மு.ப 9.00 மணிக்குஆரம்பமாகவுள்ளது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் ஏ. டபிள்யு அரியநாயகம் கலந்து கொள்வார்

தொடர்ந்து 4 தினங்கள் இடம்பெறவுள்ள இப் பயிற்சிக்கானபிரத்தியேக நடவடிக்கைகள் அனைத்தையும்நெடுந்தீவு மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் மேற் கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறி நேற்று 9 ஆம் திகதி ஆரம்பித்துஇப்பயிற்சி 16ஆம் 17 ஆம்திகதிகளிலும் மேற்படி சபை மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் உள்ளூராட்சி முகாமைத்துவ ஆணையின் கீழ் மேற்படி பயிற்சிநெறி இடம்பெறுகின்றது (க-12)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

நவம்பர் மாதம் 06ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 170928 ஏ | 157956 ஏ |
| 157956 பி | 166654 ஏ |
| 166815 ஏ | 166815 பி |
| 166815 சி | 169069 ஏ |
| 169232 ஏ | 169232 பி |
| 169244 ஏ | 169302 ஏ |
| 169942 ஏ | 170063 ஏ |
| 170063 பி | 170063 சி |
| 170064 ஏ | 170064 பி |
| 170064 சி | 170096 ஏ |
| 170096 பி | 170096 சி |
| 170096 டி | 170158 ஏ |
| 170158 பி | 170158 சி |
| 170158 டி | 170158 ஈ |
| 170257 ஏ | 170257 பி |
| 170284 ஏ | 170284 பி |
| 170285 ஏ | 170285 பி |
| 170332 ஏ | 170384 ஏ |
| 172712 ஏ | 172712 பி |
| 172727 ஏ | 172727 பி |
| 172727 சி | 172745 ஏ |
| 172745 பி | 172841 ஏ |
| 172915 ஏ | 172915 பி |
| 172915 சி | 173111 ஏ |
| 173111 பி | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 145350 ஏ | 172045 ஏ |
| 172100 ஏ | 172126 ஏ |
| 173470 ஏ | 173588 ஏ |
| 173604 ஏ | 173613 ஏ |
| 173687 ஏ | 173701 ஏ |
| 173719 ஏ | 173720 ஏ |
| 173726 ஏ | 173777 ஏ |
| 173785 ஏ | 173875 ஏ |
| 173903 பி | 173904 ஏ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 170456 ஏ | 173960 ஏ |
| 173972 ஏ | 173972 பி |
| 173972 சி | 173973 ஏ |
| 173985 ஏ | 173985 பி |
| 173985 சி | 174001 ஏ |
| 174001 பி | 174001 சி |
| 174001 டி | 174207 ஏ |
| 174207 பி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 144864 ஏ | 144864 பி |
| 170648 ஏ | 170648 பி |
| 170648 சி | 171621 ஏ |
| 173939 ஏ | 173939 பி |
| 173966 ஏ | 173982 ஏ |
| 173982 பி | 174107 ஏ |
| 171935 ஏ | 173449 ஏ |

| | |
|---|---|
| 173586 ஏ | 173586 பி |
| 173903 ஏ | 150450 ஏ |
| 150450 பி | 150450 சி |
| 169212 ஏ | 170134 ஏ |
| 170181 ஏ | 170181 பி |
| 170181 சி | |
| 172748 ஏ | 172783 ஏ |
| 172796 ஏ | 172895 ஏ |
| 172895 பி | 173064 ஏ |
| 173064 பி | 173182 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 171515 ஏ | 161920 ஏ |
| 161920 பி | 170115 ஏ |
| 170116 ஏ | 170116 பி |
| 170203 ஏ | 170293 பி |
| 170293 சி | 170302 ஏ |
| 170369 ஏ | 170376 ஏ |
| 170385 ஏ | 170390 ஏ |
| 170390 பி | 170390 சி |
| 170431 ஏ | 170431 பி |
| 172775 ஏ | 172949 ஏ |
| 172969 ஏ | 172969 பி |
| 172972 ஏ | 172972 பி |
| 173131 ஏ | 173150 ஏ |
| 173156 ஏ | 173156 பி |
| 175110 ஏ | 175110 பி |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 165443 ஏ | 165443 பி |
| 172200 ஏ | 172751 ஏ |
| 172751 பி | 172751 சி |
| 172751 டி | 1772760 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 174210 ஏ | 174210 பி |
| 161577 ஏ | 161832 ஏ |
| 161832 பி | 161832 சி |
| 169135 ஏ | 170119 ஏ |
| 170120 ஏ | 170154 ஏ |
| 170212 ஏ | 170212 பி |
| 170213 ஏ | 170213 பி |
| 170213 சி | 170354 ஏ |
| 170394 ஏ | 170993 ஏ |
| 170993 பி | 172738 ஏ |
| 172762 ஏ | 172762 பி |
| 172762 சி | 172766 ஏ |
| 172913 ஏ | 172914 ஏ |
| 172914 பி | 175126 ஏ |

## சங்கானையில் யு. என். எச். சி. ஆர். உதவி

(சங்கானை)

சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கு யு. என். எச். சி. ஆர் நிறுவனத்தால் விளையாட்டுப் பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி நிகழ்வுசங்கானை பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. ப- (க-16)

# கடமைக்குச் சென்றவர் வீடு திரும்பவில்லை

## நீர்வேலியில் சம்பவம்

நீர்வேலியிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை வேலைக்குச்செல்வதாகக் கூறிச்சென்ற குடும்பஸ்தர் ஒருவர்இதுவரை வீடு திரும்பவில்லைஎன உறவினர் கவலை தெரிவித்துள்ளனர்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான மார்க்கண்டு சிவசுப்பிரமணியம் (வயது40) என்னும் குடும்பஸ்தரே வீடு திரும்பவில்லையாம்.

பிரஸ்தாப நபரைத் தேடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாயினும் சாதகமான பலன்கள் எதுவும் ஏற்படவில்லை என உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (க)

## கேணி திருத்தம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற தொல்புரம் பத்தானைக் கேணி, சித்தன்கேணி ஆகியவற்றை புனரமைக்கும் நடவடிக்கையை வலிமேற்கு பிரதேசசபைத் தலைவர் என். திரிலோகநாதன்மேற்கொண்டுள்ளார் [உ]

# காத்தான்குடியில் சக்தி வாய்ந்த குண்டு செயலிழக்க வைப்பு

[மட்டக்களப்பு]

காத்தான்குடி பிரதான வீதியில் மக்கள் நடமாட்டம் மிக்க நியூ ஈஸ்ரேன் பஸ்கம்பனி மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்னால் சக்தி வாய்ந்த குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டு, குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் செயலிழக்கச்செய்யப்பட்டது.

மேற்படி குண்டு வெடிக்க வைக்கப்பட்டபோது காத்தான் குடி நகரமே அதிர்ந்தது.

மக்கள் நடமாட்டம் மிக்க பகுதியில் மேற்படி குண்டு வெடித்திருந்தால், பல நூறு உயிர்கள் பலியாகி இருக்கலாம் எனப் பொலிஸார்தெரிவித்தனர்.

இவ் இடத்திலிருந்து ஏற்கனவே நான்கு தடவைகள் குண்டு கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சு-60)

# விபத்தில் காயம்

(மந்திகை)

பருத்தித்துறைப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குடத்தனை வடக்கைச் சேர்ந்த மரியநாயகம் ஜெயதாஸ் (வயது-26) என்பவரேகாயமடைந்தவராவார். (ச 3)

## பதவிஉயர்வு

(கல்வயல்)

மீசாலைகிழக்கைச்சேர்ந்த நாகலிங்கம் பரமசிவன் கிராமசேவையாளர் தரம் 2 இல் இருந்து தரம் 1இற்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இவர் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 15 வருடங்களுக்கு மேல் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ச-111)

## மீண்டும் வீதியோர வியாபாரம்

(ஈச்சமோட்டை)

யாழ். கொட்டடி மீன் சந்தையை அண்டிய பகுதியில் மீண்டும்வீதியோர வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

யாழ். மாநகரசபை ஊழியர்களின் நடவடிக்கையை அடுத்து வீதியோர வியாபாரக் கொட்டகைகள் அகற்றப்பட்டது தெரிந்ததே.

எனினும் மீண்டும் ஆரம்பித்திருக்கும் இவ் வியாபார நடவடிக்கைகளால் போக்குவரத்திற்கு இடையூறுகள் ஏற்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (சு-59)

## அடிக்கல் நாட்டல்

(மந்திகை)

உடுப்பிட்டி தாவடி நாவலர் சனசமூக நிலயத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா அண்மையில் சனசமூகநிலயத்தின் தலைவர் கொ.குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைத் தலைவர் வல்லிபுரம் நடராசா கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டிவைத்தார். இந் நிகழ்வில் பருத்தித்துறை பிரதேசசபை உபதலைவர் பரஞ்சோதி ரவீந்திரனும் கலந்து கொண்டார்.

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபையினால் ஒதுக்கப்பட்ட 2 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் இச்சனசமூக நிலையம் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்நக்கது. (உ-23)

★ ★

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணிசிலத்திரு அம்பலவாண நாவலர் வளாக தமிழ்ச் சங்க பணிமனைக்கான புதியமண்டப அடிக்கல் நாட்டுவிழா, நாளை திங்கட்கிழமை பி.ப. 3.30 மணியளவில் இடம்பெறவுள்ளது

புலவர்மணி அ. ஆறுமுகம் அடிக்கல் நாட்டிவைக்கும் இந்நிகழ்வில் பேராயர் கலாநிதி சு. ஜெபநேசன், சீலத்திரு சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவர்.

வாழ்த்துரைகளை வித்துவான் க. சொக்கலிங்கம், சைவப்புலவர் வ. கந்தசாமி, ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் உட்பட பல பிரமுகர்கள் ஆற்றுவர். (உ)

## மரக்கன்று விநியோகம்

(மண்டைதீவு)

வேலணைப் பிரதேசசபையால் அதன் நிர்வாக எல்லைக் குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு நிழல்தரும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மலைவேம்பு, சமண்டலை, தேக்கு முதலியமரங்கள் விநியோகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-11)

யாழ்ப்பாணம்

## இன்று ஒரு தகவல்

# பிறரைக் குறைகூறு முன் இரண்டு தடவை யோசி

படைத் தலைவன் தன் படையினருடன் பேசி இக்கட்டான போர்நிலைமையை எடுத்து விளக்கிக் கொண்டிருந்தான். அவன் "எனக்கு இப்போது பத்து வீரர்கள் வேண்டும் உயிரை விடவும் அவர்கள் தயாராக இருக்க வேண்டும். உயிர் பிழைத்துத் திரும்ப அவர்கட்கு வாய்ப்பே இல்லை. இப்படித் தாய்நாட்டுக்காக உயிரைக்கொடுக்கத் தயாராக இருப்பவர்கள் இரண்டு அடி முன்வைத்து வரவும். திரும்பவும் சொல்கிறேன் உயிர்தப்ப வாய்ப்பே இல்லை. இந்தப்பத்து வீரர்களும் பகைவர் கோட்டைக்குள் நுழையவேண்டும்" என்றான்.

அந்தச் சமயம் படைத் தலைவனின் தனிச்சேவகன், படைப்பெருந்தலைவனின் அவசரக் கடிதம் ஒன்றைக் கொண்டுவந்து தலைவனிடம் கொடுத்தான். படைத்தலைவன் அதைப்படித்து விட்டு நிமிர்ந்தான். அவன் முன் படையில் ஒருவர் கூட வரிசையிலிருந்து விலகிவராமல் படை நின்றிருந்தது.

படைத்தலைவன் கர்ஜித்தான் "ஏன் ஒருவர் கூடமுன் வரவில்லை? தாய்நாட்டை விடத் தன்உயிர் இனியதா? கோழைகளே! துரோகிகளே" என்றான்.

ஒருவீரன் கையை உயர்த்திக் கொண்டு "மன்னியுங்கள் தலைவரே, எங்கள் வரிசையில் அத்தனை பேரும் இரண்டடி முன்னே வந்திருக்கிறோம். நாங்கள் அனைவரும்தாய் நாட்டுக்காக உயிரைக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறோம்" என்றான்.

நன்றி
விவேகவாணி

# பொலிஸ் மாஅதிபரின் இடத்திற்கு கிங்ஸ்லி

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் லக்கி கோடித்துவக்கு ஓய்வில் செல்லவுள்ளார். இதனால் புதிய பொலிஸ்மா அதிபரை நியமனம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அடுத்தவருடம் ஜனவரி மாதம் 7ஆம் திகதி ஓய்வு பெறவுள்ள பொலிஸ்மா அதிபரின் பதவிக்கு ஓய்வு பெற்ற முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் கிங்ஸ்லி விக்கிரமசூரியாவை நியமிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ரி. ஆர். ஆனந்தராஜாவை இப்பதவிக்கு நியமிக்க அரசதரப்பில் ஒருசாரார் விரும்புவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (இ)

# தரமான சீமெந்தையே நாம் விற்கின்றோம்

## ஏ. எம். ரி. ஸ்தாபனம் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு தரம் வாய்ந்த சீமெந்துவகைகளையே எமது நிறுவனம் விநியோகித்து வருகின்றது. இவ்விடயத்தில் எந்தவிதமான சந்தேகமும் ஏற்படத் தேவையில்லை.

மேற்கண்டவாறு கொழும்பில் செயற்படும் ஏ. எம். ரி. ஸ்தாபனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

எமது நிறுவனத்தின் மூலமாக யாழ்ப்பாணத்திலுள்ள பின்வரும் வர்த்தகர்கள் எம்மிடம் சீமெந்தை பெற்று நியாயமான விலையில் விற்பனை செய்து வருகின்றார்கள் என்பதை பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு எம்மிடம் உள்ளது.

எஸ். வீ. எம். கம்பனி 2500 பைக்கற் (மகாவலி மறையன்) ஈஸ்வரபகவான் கம்பனி 5000 பைக்கற் (மகாவலி மறையன்) யாழ்ப்பாணம் ஈஞ்சியம் 500 பைக்கற் (மகாவலிமறையன்) அம்பிகை களஞ்சியம் 3500 பைக்கற் (மிடசுயிசீமெந்து)

மேற்கூறப்பட்ட சீமெந்து 1ஆம்தர சீமெந்து என்பதை உறுதிப்படுத்துவதுடன் நியாயமான விலையில் விற்கப்படுகிறது என்பதனையும் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

## மரம் நடுகை

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல் தமிழ்நாதம் இளைஞர் கழகத்தினரால், புளியங்கூடல் மகாமாரி முன்பள்ளி நிலைய வளாகத்தில் மரம்நாட்டுவிழா இடம்பெற்றது.

அண்மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மலைவேம்பு, தேக்கு போன்ற மரங்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன. (ச-75)

## இந்தியா-இலங்கைக்கு ஆயுதம் வழங்குவது

# தற்போதைய சமாதான நிலையை குழப்பும் ஒருவகை முயற்சியே

## மலையக மக்கள் முன்னணித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சமாதான சூழல் ஒன்று ஏற்பட்டு வருகின்ற தற்போதைய சூழ்நிலையில் இந்தியா- இலங்கைக்கு நேரடியாக யுத்த உதவி வழங்க முன் வந்திருப்பது ஏன் என்பது எமக்கு புரியவில்லை.

இலங்கை கடற்படைக்கு, இந்தியா விமானந்தாங்கி யுத்தக்கப்பலொன்று வழங்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி. சந்திரசேகரன் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு அவசர கடிதம் ஒன்றைஅனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேற்கண்டவாறுவினாவெழுப்பப்பட்டுள்ளது.

மேலும் சந்திரசேகரன் எம்.பி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்;

இக் கப்பலை இலங்கைக்கு இந்தியா வழங்கியதன் மூலம் இலங்கை விவகாரத்தில் இந்தியாகொண்டுள்ளகொள்கையில் தடம் புரண்டுள்ளதாகவே நாம் கருதுகின்றோம்.

யுத்தத்தை தீவிரப்படுத்தும் வகையில் இந்தியா எடுக்கும் எந்த ஒரு தீர்மானத்தையும் சர்வதேச சமூகமோ அல்லது இலங்கையிலுள்ள சிறுபான்மை மக்களோ அல்லது மனிதநேய சமூகமோ ஒருபோதும்ஏற்றுக்கொள்ளமாட்டாது.

இந்த நிலையில் இந்தியா இத்தகைய நிலைப்பாடுகளை மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (உ)

## இளைஞர் கைதென முறையீடு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் இருந்து இடம் பெயர்ந்து சுதுமலையில் வசித்துவந்த தில்லை நடராஜா மோகன்ராஜ் (வயது 23) என்ற இளைஞர் இம் மாதம் 5ம் ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் இளைஞர் கைது செய்யப்பட்டமையை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டினை படையினர் வழங்கியுள்ளனர். (உ-)12

## நிரந்தர நியமனம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட 27சமுர்த்தி ஊழியர்களுக்கு நிரந்தர நியமனக்கடிதம் அண்மையில் வழங்கப்பட்டது. நல்லூர்பிரதேசசபைத் தலைவர் க.மணி பல்லவராஜன் வழங்கினார். இந்நிகழ்வில் நல்லூர் பிரதேசசெயலர் க. குணராஜா மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன்உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

## வீதிபுனரமைக்க ஆவனசெய்க

[மண்டைதீவு]

நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாதிருக்கும் கொக்குவில் மேற்கு வராக் கோவில் வீதியை புனரமைத்து தருமாறு கோரி, இப்பகுதி மக்கள் நல்லூர் பிரதேசசபைத் தலைவர் கே. மணிபல்லவராஜனிடம் மகஜர் ஒன்றினை கையளித்துள்ளனர். [உ-11]

## ஈச்சமோட்டை

# வீதி திருத்தம் இல்லை பொதுமக்கள் கவலை

(ஈச்சமோட்டை)

ஈச்சமோட்டை வீதி நீண்டகாலமாய் திருத்தப்படாது இருப்பதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

ஏறத்தாழ 50 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட இவ் வீதி, அதன் பின் எந்தவொரு திருத்த வேலைகளுக்கும் உட்படுத்தப்படாது இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இது தொடர்பாக உரியவர்களிடம் முறையிட்ட போதிலும் ஏதொரு நடவடிக்கையும் எடுக்காததுடன், அயலில் காணப்படும் வீதிகள் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்து, ஏன் இந்தப் பாரபட்சமென பொதுமக்கள் தரப்பில் வினாவெழுப்பப்பட்டுள்ளது. (உ-59-110)

# கொழும்புத்துறையில் கூச்சல் கூப்பாடு மக்கள் பயப்பீதி

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறையில் மக்கள் இடம்பெயர்ந்துள்ள பகுதிகளில் இருந்து பெரும் எண்ணிக்கையானோர் ஒருமித்து கூச்சல் போடும் சத்தம் கேட்டு வருகிறது.

பகல் வேளைகளில், விட்டு விட்டுக் கேட்கும் இக் கூச்சலினால், அப்பால் இருக்கும் பொதுமக்கள் பெரும் பயபீதியடைந்தவர்களாய் காணப்படுகின்றனர்.

இது பற்றி, விரிவாக ஆராய்ந்த போது, பயிற்சியில் ஈடுபடும் இராணுவத்தினரே இவ்வாறு கூச்சல் கூப்பாடு போட்டுவருவதாக தெரிய வந்துள்ளது. (உ-59)

## மாலையிலும் சந்தை

(நல்லூர்)

திருநெல்வேலிப்பொதுச்சந்தையில் மாலையிலும் குறிப்பிடத்தக்க சில வியாபாரிகள் மரக்கறி வியாபாரம் நடத்தி வருகின்றனர்.

பொது மக்களினதும் முக்கியமாக அரச உத்தியோகத்தர்களினது வசதிகைக் கருத்திற் கொண்டு மாலையிலும் வியாபாரம் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ச-103)

## பொதுக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல் மகமாரி சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டமும், நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 16ஆம் திகதி நிலையத் தலைவர் செல்வன் எஸ் ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறும். [உ-75]

## பல்கலை

# அனுமதியில் புதுமுறை ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

1999 ஆண்டு ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகம் ஒன்றில் ஏற்கனவே பதிவு செய்து கொண்ட விண்ணப்பதாரிகள் தமது பதிலை வாபஸ் பெற்று இந்த ஆண்டின் பரீட்சை முடிவின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க, அனுமதிப்பது என பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

ஆணைக்குழு செய்த முறைப்பாடுகளை அடுத்து இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது;

இதற்கமைய தமது பதிவை இரத்து செய்து கொள்ள விரும்பும் மாணவர்கள் அது குறித்து கூடிய விரைவில் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக பதிவாளருக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டும். அடுத்த மாதம் 31ம் திகதிக்கு முன்னதாக இதைச் செய்ய வேண்டும்.

சிறந்த பெறுபேறை எதிர்பார்த்து இதற்கு முனைவர் தமது பதிவை ரத்து செய்து கொண்ட மாணவர்கள்விரும்பினால் அதனை வாபஸ் பெற்று அதேபயிற்சிநெறிக்கு புதிதாக விண்ணப்பிக்க அனுமதிப்பது என்றும் பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இது அடுத்த மாதம் 31ம் திகதிக்கு பிந்தாமல் செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளையில், இந்த ஆண்டு க. பொ. த. உயர்தரப் பரீட்சை முடிவின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள காலக்கிரமத்தில் கோரப்படும் என்றும் விண்ணப்ப முடிவுத் திகதி அடுத்த மாதம் 31ம் திகதியாகும் என்றும் மேலும் அறியப்படுகிறது. (க-05)

# மன்னார் மீனவர்கள் பிரச்சினை மீன்வளத்துறை அமைச்சில் மாநாடு

## அமைச்சர் டக்ளஸின் ஏற்பாட்டில் நடந்தது

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமான உயர்மட்ட மாநாடொன்று அண்மையில் மீன் வளத்துறை அமைச்சில் இடம் பெற்றது.

வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு, தமிழர் விவகார, இந்துகலாசார அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின் ஏற்பாட்டில், மீன்வளத்துறை அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் மேற்படி மாநாடு நடைபெற்றது.

கடற்றொழிலில் ஈடுபடும் நேரம் காலை 6மணி முதல் மாலை 6மணிவரை நீடிக்கப்பட்டதுடன் பத்து குதிரை வலுச்சக்தி கொண்ட வெளியிணைப்பு இயந்திரம் பாவிப்பதற்கும் அனுமதி அளிக்கப்பட்டது. அத்துடன் 5ஆயிரம் மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை மன்னார் மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு புதிய கட்டடத்தை அமைக்க பத்து லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன், மீனை பழுதடையாது பேண குளிரூட்டி அறையொன்று அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### விடுதலைப் புலிகளுக்கான

# ஆயுதக் கப்பல் வன்னி செல்கிறது

# ஜெயலலிதா அரசிற்கு எச்சரிக்கை!

(சென்னை)

பல கோடிக்கணக்கான ரூபா பெறுமதிமிக்க நவீன ரக ஆயுதங்களுடனும் மற்றும் போர்த்தளபாடங்களுடனும், வெடி பொருட்களுடனும் ஆயுதக் கப்பல் ஒன்று வன்னி நோக்கி விரைவதாக முன்னாள் தமிழக முதல்வரும் அ.இ.அ.தி.மு.க பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அந்த எச்சரிக்கையில் அவர் தெரிவித்திருப்பதாவது;

கன்னட திரைப்பட நடிகர் ராஜ்குமாரை விடுவிப்பதற்கு சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பனால் பெறப்பட்ட பணயப் பணத்தில் விடுதலைப் புலிகளுக்கு கொள்வனவு செய்யப்பட்ட நவீனரக ஆயுதங்கள், வெடி பொருட்கள், மற்றும் யுத்த தளபாடங்களுடன் ஆயுதக் கப்பல் ஒன்று வன்னி நோக்கி விரைந்து கொண்டிருப்பதாக ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பிரச்சாரம் அதிகரித்துள்ளதாகவும். பிரபாகரனின் பிறந்தநாளை ஒட்டிய வாழ்த்துச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதாகவும், தெரிவித்த அவர் இவை தொடர்பாக தமிழ்நாடு அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மத்திய அரசும் இதனைப் பார்த்துக் கொண்டு இருப்பதாகவும், கவலை தெரிவித்துள்ளார்.

(வ)

### உல்பா தீவிரவாத

# அமைப்பின் பிரமுகர் சுட்டுக் கொலை

# பழிவாங்கும் நடவடிக்கையாம்

(புதுடில்லி)

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில், பிரிவினைவாதத் தலைவர் ஒருவரும் அவருடைய சகோதரரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

உல்பா தீவிரவாத அமைப்பின் வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பானவரும் அவருடைய சகோதரருமே கொல்லப்பட்டவர்கள் என தெரிய வந்துள்ளது.

கடந்த வியாழனன்று 18 பேரை, உல்பா தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றமைக்கு பழி தீர்க்கும் நடவடிக்கையாக, ஆயுதபாணிகள் இப்படு கொலையை புரிந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

(உ)

### மத்திய கிழக்கில்,

# தொடரும் வன்முறைச் சம்பவங்கள்

# இற்றைவரை 300 பேர் பலி

(ஜெருசலேம்)

மத்திய கிழக்கின், காஸா மற்றும் மேற்குக் கரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெவ்வேறு வன்முறைச் சம்பவங்களில் 10 பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலிய யுத்த டாங்கிகள், மேற்குக்கரை நகரான ஜெனின் பகுதியில் நடத்திய தாக்குதலில் 3 பொலிஸார் உட்பட பலஸ்தீன தரப்பினர் ஐவர் கொல்லப்பட்டனர்.

பெத்தலகேம் நகர் அருகில் இஸ்ரேலிய துருப்புக்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பலஸ்தீனியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்குக்கரை தென்பகுதியில், கார் ஒன்றின் மீது பலஸ்தீனியர் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலிய ஆண்கள் இருவரும் பெண்கள் இருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இதே சமயம், மத்திய கிழக்குப் பகுதியில் நடந்த 10 வாரங்களாகத் தொடரும் வன்முறைச் சம்பவங்களில் 38 இஸ்ரேலியர் உட்பட இது வரை 300 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## உலக தரிசனம்

# அப்பாவி பொதுமக்கள் மீது எரிகுண்டுத் தாக்குதல்

## ஸ்ரீநகரில் சம்பவம்

(புதுடில்லி)

இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரின் தலைநகர் ஸ்ரீநகரின் மேற்கே 80 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நகர் ஒன்றில் இடம்பெற்ற எரிகுண்டுத் தாக்குதலில் 30 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் பலத்த எரிகாயங்களுக்கு உள்ளாகியிருப்பதாக அறிய முடிகிறது.

மக்கள் கூட்டம் நிறைந்த சடைத்தெரு ஒன்றிலேயே இவ் எரிகுண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் அகப்பட்ட ஐவரின் நிலை கவலைக்கிடமான வகையில் இருப்பதாக சிகிச்சையளிக்கும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்தவர்களில் மூவர் பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர்களாவர்.

தாக்குதலை நடத்தியவர்கள் குறித்து உறுதியாக கூற முடியாதிருப்பதாக காஷ்மீர் பாதுகாப்புத்துறையினர் தெரிவித்துள்ளனர். (உ)

# இந்தியாவுடன் பேசத்தயார்

## ஜெனரல் முஷாரப் அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுடன் பேச்சு வார்த்தை நடத்தத் தயார் என பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பெர்வேஸ் முஷாரப் அறிவித்துள்ளார்.

முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கு இந்தியா மறுத்து வருகின்ற போதிலும், இந்தியாவுடன் பேச்சு வார்த்தை நடத்தி சிறந்த பயனுள்ள தீர்வுகளை காண விரும்புவதாகவும் முஷாரப் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தனது கருத்து குறித்து இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் சாதகமான கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் எனவும், முத்தரப்பு பேச்சுவார்த்தையில் தான் பூரண நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் முஷாரப் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# பொரிஸ் போர்க்கொடி

(மொஸ்கோ)

முன்னாள் சோவியத் யூனியன் தேசிய கீதத்தினை, மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வரும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டினுடைய திட்டத்துக்கு முன்னாள் ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சின கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

(உ)

## ஈராக் மீதான தடைகளை அகற்றவும்

(வத்திக்கான்)

ஈராக்மீது ஐக்கிய நாடுகள் சபை விதித்துள்ள பொருளாதாரத்தடைகளை நீக்க வேண்டும் என்று வத்திக்கான் செயலர் கேட்டுக் கொண்டார்.

அவர் ஐ.நா. சபையை மேலும் கேட்டுக் கொள்கையில்; ஈராக் அரசு விடும் பிழைகளுக்கு அப்பாவி பொது மக்களை நாம் துன்புறுத்துவது சரியல்ல என்றும் கடந்த பத்து ஆண்டுகளாக மக்கள் அங்கு கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள் என்றும் வத்திக்கான் செயலர் கேட்டுக் கொண்டார். (க)-5

# உலக தரிசன அறிவுப் போட்டி-05

## போட்டி விதிமுறைகள்

1) வயது வேறுபாடின்றி எவரும் பங்கு பற்றலாம். (வலம்புரிக்குடும்பத்தினரைத்தவிர)
2) வினாக்கள் யாவும் நவம்பர் மாத வலம்புரியின் உலக தரிசனத்தைச் சார்ந்ததாக அமையும்.
3) போட்டியாளர் தனது பெயர், விலாசம். பிறந்ததிகதி என்பனவற்றை குறித்தபடிவத்தில் எழுதி அதனை விடைத்தாளுடன் இணைத்து ''வலம்புரி'' இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
4) போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மூவருக்கு பரிசில்கள் வழங்கப்படுவதுடன் அது பற்றிய விபரம் வலம்புரியில் வெளியிடப்படும்.
5) விடைகள் யாவும் 25 - 12 - 2000 இற்கு முன்வந்து சேரக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
6) வினா இலக்கங்களை குறித்து விடையை எழுதினால் மட்டும் போதுமானது (வினாத்தாளை இணைக்க வேண்டாம்)

## போட்டியில் வெல்ல...

**மாதம் தோறும் நடைபெறும் உலகதரிசன அறிவுப் போட்டியில் வெற்றி பெற்று பெறுமதியான பரிசில்களை வெல்ல இன்றே வலம்புரியின் உலக தரிசனத்தை பாருங்கள்.**

1) இந்திய சிவசேனாக் கட்சியின் தலைவர் பெயரென்ன?
2) இவ் வருட முதியோர் தினத்துக்கு சிங்கப்பூரில் கொடுத்த மகுட வாக்கியம் யாது?
3) அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பிரச்சினைக்குள்ளான மாநிலம் எது?
4) சிறுவருக்கு சிகரெட் விற்றவருக்கு தண்டனை கொடுத்த நாடு எது?
5) மந்திரிகள் போன்றோரை விசாரிக்க உதவும் மசோதாவை இந்தியா கொண்டுவர இருக்கிறது. அதன் பெயர் என்ன?
6) பிலிப்பைன்ஸில் யாருடைய கொடும்பாவி எரிக்கப் பட்டது?
7) எந்த நாட்டில் சுரங்க ரயிலில் தீப்பிடித்து மக்கள் எரிந்தார்கள்?
8) இந்தியாவின் 28 வது மாநிலம் எது?
9) எந்த நாட்டில் மூன்றாவது உலக இஸ்லாமிய மகாநாடு நடந்தது?
10) பட்னா இந்தியாவின் எந்த மாநில நகர்?
11) அமெரிக்காவில் செனட்டரான முதல் இந்தியர் யார்?
12) சீனாவிற்கு எதிராக வர்த்தகப் போட்டியில் இறங்கிய அமைப்பு எது?
13) தமிழக எதிர்க் கட்சித் தலைவர் யார்?
14) சமையல் பாத்திரங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டம் எங்கு நடைபெற்றது?
15) இந்திப் படத்துக்கு ஒரு தொகையும் மாநில மொழி படங்களுக்கு ஒரு தொகையும் ஒளிபரப்ப தூரதர்சன் கொடுக்கிறது என்று குறைபட்டவர் யார்?
16) எந்த நாட்டுப் பெண்ணின் தலையில் 19 கட்டிகள் இருந்தன?
17) மூன்று வயதில் சங்கீத ஞானம் படைத்த சிறுவன் எந்த நாட்டைச் சேர்ந்தவன்?
18) இசைப்புயல் ரகுமான் என்ன புது முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்?
19) அமெரிக்கா பிறநாட்டவர் விசா விடயத்தில் கடைப் பிடிக்கும் கொள்கை யாது?
20) இந்திய அணு ஆயுதத் தலைவர் யார்?
21) என்ன பெருநாளை ஒட்டி வாஜ்பாய் யுத்த நிறுத்தத்தை அறிவித்தார்?
22) எங்கு வேலை தேடிச் சென்றோர் பாலைவனத்தில் கருகினர்?
23) ஹொங்கொங் மருத்துவ மனையிலிருந்து தப்பியோடிய பிரபல கேடி யார்?
24) விடுதலைப் புலிகள் தலைவர் பேரில் தமிழ் நாட்டில் அர்ச்சனை செய்யச் சென்று பிடிபட்டவர் யார்?
25) உலகின் மகிழ்ச்சியான நாடென கருத்துக்கணிப்பில் குறிப்பிடப்பட்ட நாடு எது?

### சீன அமைச்சர்

## ஹங்கேரி பயணம்

(பிஜிங்)

ஹங்கேரியில் பயணம் மேற்கொண்டிக்கும் சீன வெளிநாட்டமைச்சரை அந்நாட்டுத் தலைவர் சந்தித்து உரையாடினார்.

சீனாவும் ஹங்கேரியும் முக்கியமான கூட்டாளி நாடுகளாகும். சீன ஹங்கேரி உறவு நல்ல முறையில் வளர்ந்து வருவதாக அதிபர் தெரிவித்தார்.

அங்கு சீன வெளி நாட்டமைச்சரும் ஹங்கேரி வெளி நாட்டமைச்சரும் பேச்சு வார்த்தை நடத்தினர் ஹங்கேரி அதிபர் ஒரேசீனக் கொள்கையைப் பாராட்டிப் பேசினார் [து]

## சமுர்த்தி செயலணி அமைப்பு

(சங்கானை)

சங்கானை மேற்கு ஜே-79 கிராமசேவையாளர் பிரிவிற்கான சமுர்த்தி செயலணி அமைக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

[உ-ப-16]

## ஒளிவிழா

[நெடுந்தீவு]

நெடுந்தீவு மேற்கு தென்னிந்திய திருச்சபையால் வருடம் தோறும் நடாத்தப்பட்டு வரும் ஒளிவிழா எதிர் வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை பி. ப. 2. 30 மணிக்கு மறை போதகர் ஆனந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ளது [உ-82]

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப் படும் - குறள்

## வலம்புரி

### இரண்டு கோமாளிகள்

மக்களை மகிழ்வடைய வைப்பதில் நாடகக்கலை முதன்மையானது. அங்கு பலரசனைகளும் காணப்படும். அதில் ஓர் அங்கமாக ஒன்று இரண்டு கோமாளிகளும் நடிப்பார்கள். நாடகத்தின் நகர்வுக்கிடையே அடிக்கடி தோன்றி முட்டாள்தனமாகக் கதைத்து பார்வையயளர்களைச் சிரிக்கவைப்பார்கள். இதுவே கோமாளிகளின் பணியாகும். இது நாடகத்தின் நிகழ்வு.

அதேபோன்று சில கோமாளிகள் அரசியிலிலும் இருப்பதுண்டு அவர்கள் அர்த்தமின்றி-காரணமின்றி முட்டாள்தனமாகப் பேசுவார்கள்.

அந்தவகையில் தமிழ் நாட்டுஅரசியலில் இரண்டு கோமாளிகள் இருக்கின்றனர். அவர்களில் ஒருவர் சுப்பிரமணிய சுவாமி மற்றவர் ஜெயலலிதா. இவ்விருவரின் கதைகளும் நடைமுறையில் சாதாரண மனிதர்களின் கதைகள் போன்று இருக்கமாட்டாது.

இதற்கு ஜெயலலிதா சில தினங்களுக்கு முன் விடுத்த அறிக்கையில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதக் கப்பலொன்று வன்னி சென்று கொண்டிருப்பதாகவும், அதற்கான நிதியை சந்தனக்கடத்தல் வீரப்பனே கொடுத்துள்ளார், என்றும் தெரிவித்துள்ளமை உதாரணமாகும்.

செருப்புமுதற்கொண்டு தங்கப்பாளங்கள் வரை சூறையாடி 'ஊழலின் ஊதாரி' என்று பெயரெடுத்த ஜெயலலிதா விடுத்த அறிக்கையானது ஈழத் தமிழர்களுக்கு எதிரான போக்கையே அவர் கொண்டுள்ளார் என்பதையே வெளிப்படுத்தியுள்ளது.

ஈழத்தில் உயிருக்கு உத்தரவாதம் இல்லையென்று தமிழகம சென்று தங்கியிருந்த இலங்கைத் தமிழர் தமிழ்நாட்டின் எந்தக்கல்லூரியிலும் பாடசாலையிலும் கற்பதற்கு தடைவிதித்தவர் ஜெயலலிதாவே

அவருக்கு ஈழத்தில் நடக்கும் இன உரிமைப் போராட்டத்தைப்பற்றிக் கதைக்கும் தகுதியோ-தரமோகிடையாது.

அதுமட்டுமன்றி ஈழத்தில் நடக்கும் புனிதப் போருக்கு குந்தகம் விளைவிக்கும்வகையில் ஜெயலலிதா விடுத்த அறிக்கை. அவர் எட்டப்பன் கூட்டத்தின் வாரிசோவென்றுகூட நினைக்கத் தோன்றுவதுடன் இப்படியான அறிக்கையை விட்டு குட்டையைக்குழப்புவதற்காக ஜெயலலிதா எங்காவது லஞ்சம் வேண்டுகிறாரோ என்றும் சந்தேகிக்கத்தோன்றுகிறது.

# வீதியோரங்களில் தொடரும் அவல வாழ்வு

# விடிவைநோக்கி காத்திருக்கும் நம்மவர்

### ஜே. கீதபொன்கலன்

யுத்தத்தின் கொடுமையால் மக்கள் வீடு வாசல்களை விட்டு புலம்பெயர்ந்து வீதியோரத்தால் தங்களால் இயன்ற சுமைகளுடன்சென்று கொண்டு இருக்கின்றார்கள். அவ்வழியோரத்தில் ஓர்உரையாடல், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த தந்தை மிகவும் இளைத்த நிலையில் எங்களைப்பார்த்து என்ன நினைக்கப்போகின்றார்கள், என்று பிள்ளைகளுடன் வறட்சி தோய்ந்த குரலுடன் கதைக்கின்றார். பலகுரல்கள் நாங்கள் அகதியா அப்பா, இல்லை இல்லை நாங்கள் இடம் பெயர்ந்தவர்கள், நாங்கள் நாடோடிகளாகி விட்டோம் தியாகிகளாகி விட்டோம்; நாங்கள் வெளிநாட்டுக்குப் போவதற்குநல்ல வசதியாகப் போச்சு அண்ணா கூப்பிடுவார், என பல குரலொலிகள் பல விதமாகஒலித்துக்கொண்டிருக்க முடிவின்றி நடந்து கொண்டே போனார்கள்.

#### அங்கலாய்ப்பு

சமாதானம் எப்போ? நீதியோடு கூடிய சமாதானம் எப்போ வரப்போகின்றது? மீண்டும் எங்களுடைய வீட்டுக்குப் போவோமோ? இதுதான் வாழ்க்கையா என்ற அங்கலாய்ப்பு கட்சித்தலைவர்கள் வருவார்கள். இனிக்கப் பேசுவார்கள், எங்களுக்கு விடுதலை பெற்றுத்தருவார்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் பின்னால் ஒரு கூட்டமும், போராட்டமூலம் விடுதலை கிடைக்கும் என்றுஇன்னொரு கூட்டமும் நம் மத்தியில்உலா வருகின்றது.

#### மெசியா போல்வார்

இன்றைய நற்செய்திநமக்கு என்ன கூறுகின்றது. (மார்க்கு 8.27-35)மக்கள் பார்வையில் இயேசு இறைவாக்கினருள் ஒருவராக இடம் பெறுகின்றார் இது மேலோட்டமான பார்வை பேதுருவின்பார்வையில் இயேசு மெசியாவாகத் தோன்றுகின்றார். இது ஆழமான பார்வைஆனால்பேதுரு மெசியாவின் உண்மைப் பொருளை முற்றிலும் உணரவில்லை. இயேசுவோ தன்னைப் பற்றிய பார்வையில் தெளிவுடன் இருக்கின்றார். தன் அழைப்பின் பொருளை ஆழமாக உணர்ந்திருக்கின்றார் மானிடமகன் துன்பப்பட வேண்டும் கொலை செய்யப்பட வேண்டும் என்கின்றார். திரைப்படக் கதாநாயகர்கள் துன்பப்படுவதையோ, சாவதையோ அவருடைய இரசிகர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. இயேசுவோ தன்னலம் மறந்த உண்மைஊழியன் என்பதை நாம் உணர்வது மட்டுமல்ல தன் சீடர்களும் தன் வழியைப்புரிந்துகொள்ள வேண்டும் என உணர்த்துகின்றார்.

குறுக்கு வழிகளிலும், விரைவாச் செல்வதிலும்மலிவான புகழிலும் திளைக்க நினைக்கும் தலைவர்களின் மத்தியில் இயேசு வித்தியாசமான தலைவர் என்பதை அவர் சீடர்களுக்குக் கூறுகின்றார். "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்துதம்சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும், ஏனெனில் தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும்எவரும் அதை இழந்து விடுவர். என் பொருட்டும் நற் செய்தியின் பொருட்டும் தம் உயிரை இழக்கும் எவரும்அதைக்காத்துக் கொள்வார்'' என்று யேசு தம் சீடர்களுக்குக் கூறிய நற்செய்தி இன்றும் நம் ஒவ்வொருவருக்கும் கூறும் செய்தியாகவும், தலைவர்கள் எனப்படுபவர்கள் தன்னலம் கருதாது மக்கள் நலனுக்கு மதிப்பளிப்பவர்களாக செயற்படவேண்மென்றும் சிந்திக்க இன்றைய நற்செய்தி தூண்டுகின்றது.

#### பரமபிதா பாதை காட்டிய

## சோதிட பலன்

# சனி பகவான் வக்கிரம் அடைவது சாதக பலன்களை ஏற்படுத்துமா?

### ★ த. சத்தியதாஸன் ★

(சென்றஞாயிறு தொடர்ச்சி)

**துலாம்**

**(சித்திரை 3,4,ஆம் பாதங்கள்,சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)**

14.10.2000 முதல் கண்டகச்சனிஆரம்பம்.14.10 2000 முதல் 11 4 2001 வரை சனி 6 மாதங்களுக்கு மேடத்தில் வக்கிரமாகச் சஞ்சரிக்கும். ராகு, கேதுக்கள் யோகஸ்தானங்களில் சஞ்சாரம் செய்கின்றன. இக்காலங்களில்குரு, சனிக்கு பிரீதி செய்தல் வேண்டும். சனி, வியாழன் நாட்களில் விரதம் அனுஷ்டித்தல் வேண்டும். குருபகவான் 8ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்கிறார், 8ல் வக்கிரமாகச் சஞ்சரிக்கும் குருபகவான் 5 வது பார்வையாக 12 ஆம் வீட்டையும் 7 ஆம் பார்வையாக 2 ஆம் வீட்டையும் 9ஆம் பார்வையாக 4 ஆம் வீட்டையம் பார்வை செய்கிறார். இக்குரு பெயர்ச்சி உங்களுக்கு அனுகூலமான பலனை உண்டாக்காது. உங்களுக்கு 7 இற் கண்டகச் சனி நடைபெற இருக்கிறது: மிகவும் உசாராகச் செயற்பட வேண்டிய காலமாகும் கவனம் தேவை.

கேதநிலையில் பாதிப்பினை உண்டாக்கும். இக் காலத்தில் எடுத்தகாரியம் உடனடி நற்பயனையும் உண்டாக்காது. பொருளாதாரத் தட்டுப்பாடுகளும் அதிக நெருக்கடிகளும் உண்டாகும். சொத்து வகையில் வீண்விரயங்களை ஏற்படுத்தும். கடன்காரர்களின் தொந்தரவு அதிகரிக்கும். வழக்குகள் சாதகமான நற்பயனை உண்டாக்காது. உடல் நிலை பாதிப்புகள். மருத்துவச் செலவுகள் அதிகமாகும். தொழிலில் மந்தமான ஒரு நிலையும், வீண் செலவுகளினால் நஷ்டங்களையும் தரும். கணவன், மனைவி உறவு நன்றாகக் காணப்படாது. உடன் பிறந்தவர்களால் ஒத்துழைப்பு இருக்காது. வாகனங்கள் பழுதடையும். இருக்கிற வீட்டிலும் குறைகள்இருந்துவரும். மனைவியின் ஆரோக்கியம்பாதிப்பு குடும்பத்திலும் நெருங்கியவர்கள் சாதகமாக இருக்கமாட்டார்கள் குறிப்பாகத் தாய் வழிக்குக் கருமம் உண்டாகும். கொடுக்கல்வாங்கல்களில் மிகவும் சாதகமானபலன் உண்டாகாது. சோதனைகள் தொடர்ந்தபடியே இருக்கும். உங்கள் குடும்பங்களில் நடைபெற்றுவரும் வழக்கு இழுபறியாக இருக்கும். அடிக்கடி பயணங்கள் உண்டாகும். இக் காலத்தில் அலைச்சல் அதிகமாக இருக்குமே யொழிய ஆதாயம் ஏதும் இருக்காது. எனவே புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும் மனதில் சோர்வு உண்டாகும். கடன்பயமும் காரியத் தாமதத்தில் கௌரவப் பதிப்பும் உண்டாகும். சகோதர வழியில் தவிர்க்க முடியாத செலவினங்களும் மனக் கசப்பும் ஏற்படும். அலைச்சல் அதிகமாகிவிடும். புதிய தொழில்தொடங்குவது உசிதமான பலன் இல்லை. அரசு சம்பந்தமான காரியங்கள் சற்று மந்தமாகவும், தாமதமாகவும். நடைபெறும் நண்பர்களாலும் நல்ல விதஉறவு இருக்காது. குடும்ப வாழ்க்கையில் நிம்மதி இருக்காது. காரியத் தடைகள் இருந்து கொண்டேயிருக்கும். மறைமுக எதிரிகளின் தொல்லைகள் அதிகமாகக் காணப்படும். உற்றார் உறவினர்களின் ஏளனத்திற்கு ஆளாகக் கூடிய நிலை உண்டாகும். தற்போதைய தெசா புத்திகளின் பலன்கள் பலமாகவிருந்தால் மேற்குறிப்பிட்ட தீய பலன்கள் தணியும்.

**விருட்சிகம்(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

14-10-2000 முதல் சனி 6 ஆம் ஸ்தானத்திலும், ராகு கேதுக்கள் அஷ்டம, தன ஸ்தானங்களில் சஞ்சாரம் செய்யும். ராகு கேதுக்களுக்குப் பிரீதிசெய்தல் வேண்டும், குருபகவான்7ஆம் வீட்டில்சஞ்சாரம் செய்கிறார்.5ஆம்பார்வையாக11 ஆம்வீட்டையும், 7 ஆம் பார்வையாக ஜென்ம ராசியையும் 9 ஆம் பார்வையாக 3 ஆம் விரிய ஸ்தானத்தையும் பார்வை செய்கிறார். உங்களுக்கு பிரமாதமான நற்பலன்கள் உண்டாக இருக்கிறது. 6 ஆம் வீட்டில் சஞ்சரித்த சனிபகவான் 11-4-2001 ற்குப்பிறகு 7 ஆம் வீட்டிற்கு வருகிறார். குரு பார்வை பலம் பெற்றிருப்பதால் சனி சஞ்சாரத்தால் ஏற்படும் சோதனைகள் யாவும் பகலவனைக் கண்ட பனிபோல் மறைந்திடும். ஏற்றமும் உயர்வினையும் கொடுத்தபடியே இருக்கும். வெற்றிகள் குவிந்தபடியே இருக்கக் கூடிய உன்னத காலமாகும்.

வெற்றிமேல் வெற்றியினை உண்டாக்கும். உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும், தொழில் மேன்மையும் உண்டாகும். உங்கள் வலிமையாவும் கூடி எதிரிகள் பலம் குறையும். கணவன், மனைவி உறவில் மகிழ்ச்சியான நிலைகள் அதிகரிக்கும். மாணவ, மாணவிகள் கல்வியில் மேன்மையடைவர், குடும்பத்தில் சுபகாரியம் நடைபெறும், வியாபாரிகள் நல்ல இலாபத்தைப் பெற்றுத் திகழ்வர். பொதுவாழ்வில் இருப்பவர்களின் புகழ் பெருமைகள் கூடிடக் காண்பார்கள். பெண்கள் நினைத்த காரியம் நிறைவேறப் பெறுவர். பொருள் வரவுகள் யாவும் தாராளமாக இருக்கும். உமது வாழ்வில் ஏற்றமும் முன்னேற்றமும் உண்டாகும். தொழில் ரீதியாகப் புதிய திருப்பத்தையும் அனுகூலத்தையும் தரும். பூர்வீகச் சொந்துகளின் சம்பந்தமான வழக்குகள் யாவும் சாதகமான பலனைத் தந்திடும். கூட்டுத்தொழில் செய்பவர் பெரும் இலபத்தை அடைவர் பெண்களுக்குக் குடும்பத்தில் பூரிப்பும் மனமகிழ்ச்சியும் உண்டாகும். அடிக்கடி வெளியூர்ப் பிரயணம் ஏற்படுத்தித் தரும்.

பொருளாதார ரீதியில் மிகவும் யோகமான பலன்கள் உண்டாகும். சிலர் புதிய வீடு கட்டி குடிபுகுதல் செய்வார்கள். அல்லது வீடுவாங்கும் அமைப்பினையும் பெற்றுத் திகழ்வர். கணவன், மனைவி உறவில் அதிக நெருக்கம் கூடும், மங்கையர்க்கு ஆடை ஆபரணத்தில்சேர்க்கை உண்டாக்கும். வேலை தேடுவோருக்கு அதற்கான வாய்ப்புகள் காணப்படும். புத்திர வழியில் அதிக சந்தோஷம் உண்டாகும். வியாபாரம் மிகவும் சாதகமான சூழ்நிலைகளில் காணப்படும் புதிய முயற்சிகள் யாவும்நற்பலனை உண்டாக்கும். பெண்களின் வாழ்வு சௌபாக்கியயோகம் பெறும். மாணவர் கல்வி உயர்ச்சியும், பரீட்சையில் சித்தியும் அடைவர். ஜெனன கால ஜாதகப்படி தற்போது நடைபெறும் தெசா புத்திகளின் பலன்கள் பலமாகவிருந்தால் யோக பலன்கள் விருச்சிக ராசிக்காரர்களுக்கு அதிகரிக்கவே செய்யும்.

(தொடரும்)

# ஐஸ் தொழிற்சாலையை மீள இயக்க முயற்சி

[ஏறாவூர்]

மின்னேரியாவிலுள்ள ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக கடற்றொழில் நீரியல்வளப் பிரதியமைச்சர் அல்ஹாக்முகைதீன் அப்துல் காதர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வருடத்திற்கு மேலாக இத்தொழிற்சாலை செயலிழந்த நிலையில் யில் உள்ளது

இதனால் மீனவர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத் தொழிற்சாலை அபிவிருத்தி செய்யப்படுமிடத்து நாளொன்றிற்கு சுமார் 400 தொன் ஐஸ் உற்பத்தி செய்ய முடியுமென் எதிர்பார்க்கப்படுகிறது. (சு-108)

# சில பொருட்கள் எடுத்துச்செல்ல தடை

(பண்டாரவளை)

சிவனொளிபாத மலைக்கு செல்லும் யாத்திரிகர்கள் இம்முறை வானொலிப் பெட்டிகள், மதுவகைகள், பொலீத்தீன் பைகள் போன்றவற்றை எடுத்துச் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பொலித்தீன் பைகளினால் டெங்குக் காய்ச்சல் பரவும் அச்சம் இருப்பதனாலேயே இதனை எடுத்துச் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பண்டாரவளைச் சம்பவத்தையடுத்து பாதுகாப்புக் கருதியே மேற்படி பொருட்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

சிவனொளிபாத மலைக்கான யாத்திரை இன்றுமுதல் ஆரம்பமாகி தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதி சுகாதார தொண்டர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிறு முற்பகல் 10.00 மணியளவில் மந்திகை மடத்தடியில் மேற்படி அமைப்பின் தலைவர் க. ரவீந்திரன் தலைமையில் இடம்பெற உள்ளது. (க)

## அங்குரார்ப்பண நிகழ்வு

வலி மேற்கு பிரதேசசெயலர் பிரிவின்கீழ் இயங்கும் அராலி வடக்கு பிரிவிற்கான சமுர்த்தி செயலணி செயற்பாட்டு அமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு இன்று 10 ஆம் திகதி அராலி வடக்கு கிராம சேவகர் அலுவலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கி.சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்விற்கு அராலி பகுதிக்கான சமுர்த்தி முகாமையாளர் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார். (சு-14)

**மனித---**

யாழ். குடாநாட்டில் யுத்தம் காரணமாக இரண்டரை லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளமையினால், சர்வதேச ரீதியாகவும் அதன் தாக்கம் வலுவடைந்துஇன்று உலகில் பத்துலட்சம் பேர் இடம் பெயர்ந்தவர்களாக வசிக்கின்றார்கள் எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

**கடற்படை...**

என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதே சமயம் இந்தியாவிலிருந்து வாங்கப்பட்ட 'சுகன்யா கிலாஸ்' என்ற ஓ.கே.பி. வகைக் கப்பல் உலங்குவானூர்தி நிறுத்தக் கூடிய வசதிகள் கொண்டதாகவிருப்பினும், பாரம் கூடிய தாக்குதிறன் கொண்ட உலங்கு வானூர்தியை அக்கப்பலில் நிறுத்திவைக்க முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை கப்பல்கொள்வனவு தொடர்பாக வெளிநாடுகளுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்களில் முறைகேடு இருப்பதாகவும், வாங்கப்பட்ட கப்பல்கள் உயர் பயன்பாடு கொண்டசிறந்த யுத்தக் கப்பல்கள் அல்ல எனவும் இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

**நிவாரண..**

களை அனுபவித்துவருகின்றனர். இவர்களுக்கு ஒழுங்கான நிவாரணப்பணிகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும், இல்லையேல் அப் பணிகளை வெளிநாடுகளிடமாவது ஒப்படைக்க வேண்டுமென்றும் அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை நிவாரணமென்ற பெயரில் அரசாங்கம் மிகக் குறைந்தளவு பணிகளையே ஆற்றிவருகின்றதென குற்றம் சாட்டிய அவர் இது தொடர்பான தொருபட்டியலை தான் வெளியிடவுள்ளதாகவும் தெரிவித்தார். (இ)


தெல்லிப்பளை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. து)
தெல்லிப்பளை.

**லொறி விற்பனைக்கான கேள்விப்பத்திரம் கோரல்**

எமது சங்கத்தின் பாவனையிலுள்ள 24 ஸ்ரீ 8407 இலக்க லொறி கேள்விப் பத்திர மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது மீளப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா ஆயிரம் (1000/-) செலுத்துவதுடன் விண்ணப்ப படிவத்திற்கான கட்டணமாக ரூபா இருபத்தைந்தும் (25/-) செலுத்தி கேள்விப்பத்திரத்திற்கான விண்ணப்பப் படிவத்தினை இச்சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்; விண்ணப்பங்களை 2000-12-23ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பொதுமுகாமையாளர் தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பளை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும். குறித்த தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் லொறி விற்பனைக்கான கேள்விப் பத்திரம் எனக் குறிப்பிடல் வேண்டும். பிந்திக்கிடைக்கும் விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். அத்துடன் கேள்விப் பத்திரங்களை ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விப் பத்திர உபசபைக்கு உரிமையுண்டு. மேற்படி லொறியை சங்கத்தின் காரியாலய நேரங்களில் பார்வையிடலாம். கூடிய கேள்விக்காரர் கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து ஒருவார காலத்திற்குள் முழுப்பணத்தையும் சங்கத்தில்செலுத்தி குறித்த லொறியை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்;

பொதுமுகாமையாளர்
தெல்லிப்பளை ப. நோ. கூ. ச. (வ. து)
(கி/1099)


# யாழ். மக்களின் தோளில் சவாரி விட்டவர்கள் இன்று வண்டில்சவாரிவிடுகின்றனர்

## தவராஜா எம்.பிகடுமையானசாடல்

(கொழும்பு)

யாழ் மக்களின் தோளில் சவாரி விட்டவர்கள் இன்று பாராளுமன்றத்திற்கு மாட்டு வண்டில்சவாரி விடுகிறார்கள் வன்னிக்கு உணவு மருந்து மற்றும் எரி பொருள் புத்தகங்கள் போன்றவற்றை அனுப்பக் கோரியும் யாழ்ப்பாணத்திற்கு தரைவழிப்பாதை திறக்கக் கோரியும் ஐக்கிய தேசியக்கட்சியின் எம்.பிக்கள் சிலர் கடந்த புதனன்று மாட்டுவண்டிலில்பாராளுமன்றம்சென்றனர்வெள்ளியன்றுஇடம்பெற்றபாராளுமன்றஅமர்வுகளின்போது ஈ.பி.டிபியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். தவராஜா மேற்படிவிடயத்தினை இவ்வாறு விமர்சித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்;

1995ஆம் ஆண்டிற்கு முன் எரிபொருள் விற்பனைமூலம் யாழ் மக்களின் பொருளாதாரத்தை கொள்ளையடித்த சுறாக்கள் இன்று மக்களிற்கு எரிபொருள் அனுப்பும் படி கோருவது விந்தையாக இருக்கிறது.

அக்காலப் பகுதியில் கொழும்பில் லீற்றர்40 ரூபாவாக கொள்வனவு செய்த மண்ணெண்ணெயை யாழ்ப்பாணத்தில் 2ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்தவர்களையும் நாமறிவோம். மொனறா எயார்விமான பயணத்திற்கென ஐயாயிரத்து300ரூபாய் படி ஆயிரம் பொதுமக்களிடம் பணத்தை வாங்கி ஏப்பம் விட்டவர்கள் இன்று அவர்களுக்காக குரல் கொடுக்கிறார் என்றும் குறிப்பிட்டார்.

இக்காரசாரமானஉரையின் போது மகேஸ்வரன் எம்.பி எழுந்து நின்று பதிலளிக்க முற்பட்ட போதிலும் பாராளுமன்ற சபாநாயகர் அதற்கு அனுமதி வழங்கவில்லை. (உ)

**புலிகள்**

டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி யு எஸ்.டி.ஜெயநாத் தெரிவித்துள்ளார்.

பிறேரட்ண (30), உபசேன (21) ஆகிய அதிரடிப்படை வீரர்களே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

நேற்று முன்தினம் இரவு 11.15 மணியளவில் நடைபெற்று இச்சம்பவத்தின் போது சுமார் 15 நிமிடங்களிற்குதுப்பாக்கிச்சமர்இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவத்தின் போது உயிரிழந்த விடுதலைப் புலி உறுப்பினரின் சடலம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சு-60)

**அமைச்சர்...**

மரண தண்டனையைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தின் கொள்கையை அமுல் செய்யவேண்டியுள்ளது.

நான் ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் மரணதண்டனைச் சட்டத்திற்கு என்னால் இணங்க முடியாது என்று தெரிவித்துள்ள அமைச்சர் நீதி அமைச்சர் என்ற முறையில் அரசாங்கத்தின் கொள்கையை அமுல் செய்ய வேண்டியுள்ளவனாக இருக்கிறேன் என்று கூறினார். (வ)

# வ. கி. புனரமைப்புக்கு ஜேர்மனி ரூ. 285.5 மி உதவி

(கொழும்பு)

போரினால் பாதிப்படைந்துள்ள வடக்கு-கிழக்கு மாகாணத்தின் இரண்டு புனரமைப்பு செயற்திட்டங்களுக்கு ஜேர்மன் அரசாங்கம் 285.5 மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் உணவு பாதுகாப்புத்திட்டத்துக்கு 161 மில்லியன் ரூபாவையும், போர் அனர்த்தத்தால் பாதிப்படைந்துள்ள மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு 124.5 மில்லியன் ரூபாவையும் வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. (இ)

# உடுவில் மகளிர்கல்லூரி அதிபர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 8ந்திகதி வலம்புரியில் வெளியான ''பூட்டிய வகுப்பறையில் மயக்கநிலையில் மாணவி'' என்ற செய்தியை மறுத்து உடுவில் மகளிர் கல்லூரியின் பதில் அதிபர் பி. எஸ் ஜெபரட்ணம்கடிதமொன்றைஅனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் மாலை ஐந்து மணிவரை மாணவன் மயக்க நிலையில் இருந்தார் என்பதும், அவர் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார் என்பதும் தவறான செய்தி எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் மாணவனின் தந்தையின்கடிதமும் இணைத்தனுப்பப்பட்டிருந்தது.

இச்செய்தியின் மறுப்புத் தொடர்பான ஆதாரங்களை வலம்புரி முழுமையாகப் பெற்றுக்கொள்ளாத நிலையிலும், சபையின் செயலாளரும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபருமான வண. ஏ. ஏ. போல் அவர்கள் வலம்புரியுடன் தொடர்புகொண்டுதந்த தகவல்களின் பேரிலும் மறுப்புச் செய்தியை வலம்புரி பிரசுரிக்கின்றது. (ந)

**மட்டக்களப் ...**

பேரணி ஆரம்பாகும். இதில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சகல வைத்தியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந)

**யாழ்**

ளில் ஒருவர் காயமடைந்தும் 11 பேர் காணாமல் போனதையும் தொடர்ந்தே மீன்பிடிப்பதற்குதடைவிதித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காணாமல் போன 11 மீனவர்களின் கதி என்னவானது என்று கண்டுபிடிக்கப்படும் வரை கடற்றொழில் செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்று பிறிதொரு செய்தி தெரிவிக்கின்றது

இது இவ்வாறு இருக்க இடம் பெயர்ந்த பாசையூர்ப் பகுதி மக்களை வீடு பார்க்க வருமாறு நேற்று அழைத்திருந்த போதும் அங்குள்ள இராணுவத்தினர் தமக்கு இது தொடர்பாக எதுவித அறிவித்தலும் வரவில்லை என்று கூறியதாகவும். தொடர்ந்தும் காத்துக் கொண்டிருந்த மக்களை பிற்பகல் 2 மணிக்கு பின்பு வீடுபார்த்துவர அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது: (ம)

**அரசின்..**

முடியாது.

பயங்கரவாதத்தை இராணுவரீதியாக ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற கருத்துக்களை கொண்டிருந்தாலும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு ஒரு கடமை உண்டு.

விடுதலைப் புலிகளுடனான யுத்தம், சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் எனக்கும் எந்த விதமான கருத்து முரண்பாடுகளும் இல்லை.

இந்த விடயத்தில் முழு அரசியல் கட்சிகளும் ஒரே கருத்தைத்தான் கொண்டுள்ளன.

சில தொடர்பு சாதனங்கள் இந்தவிடயத்தைப்பெரிது படுத்தி செய்திகள் வெளியிட்டு இருந்தாலும் இந்நிலைமைக்கு நான் விரைவில் விளக்கம் அளிக்கவுள்ளேன்.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பகுதிகளில் வாழும் மக்களினதும் மாணவர்களினதும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகாணப்படும் என்றும் பிரதமர் அங்கு தெரிவித்துள்ளார். (வ)


ஸ்ரீசெல்வா
(யாழ்ப்பாணம)
அர்ஜுன், அபிராமி
நடிப்பில்
வானவில்
(வெட்டுப்படாதநேரடிCD)
10.30 மட்டும்
சிவாஜியின்
அமரதீபம்
நேரடி CD
2-30 (ப.நேரம்)
[கி-688]

நாகம்ஸ்
சுன்னாகம்
விஜய், ஜோதிகா
நடித்த
குஷி
தினசரி; 11-00, 2-30
(புதியநேரம்)


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.